# மாலெ தீப்பொறி

MALAE THEEPORI

2025 மார்ச் 01-15 தொகுதி 25 இதழ் 14

விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200



## இப்போது இல்லையெனில் எப்போது

# இந்திய பாசிசத்தை இனம் காண்பது!

# பீகாரை மாற்ற ஒன்று கூடுவோம் – இகக(மாலெ) அறைகூவல்

2025 மார்ச் 2 ம் தேதி பாட்னா, காந்தி திடலில், பீகாரின் மூலை முடுக்கிலிருந்து, பல்வேறு இயக்கங்களில், போராட்டங்களில் ஈடுபட்டுவரும் பல்லாயிரக்கணக்கான மக்கள், “பீகாரை மாற்ற ஒன்றுகூடுபோம்” என இகக(மாலெ) விடுத்த அழைகூவலை ஏற்று அணி திரண்டனர். இது பீகார் மக்கள் போராட்டத்தில் மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும்.
தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், விளம்பு நிலை மக்கள் என பல தரப்பினரும் அங்கு கூடினார்கள். காந்தி திடலை நோக்கிய பாதையெல்லாம் மக்கள் கடலாக, செங்கொடிகளால் சிவந்து காணப்பட்டது.
“பிரச்சனைகளோ பல, தீர்வோ ஒன்றுதான்- பீகார் மாற்றப்பட வேண்டும்” என காந்தி திடலில் பேசிய இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் கூறினார். பீகாரில் நடக்கும் பாஜக-ஜேடியு ஆட்சி என்பது கொள்ளை, அடக்குமுறை, போலீஸ் அராஜகம், நிலபிரபுத்துவ ஒடுக்குமுறை ஆட்சியாகும் என்றார். அவர் மேலும், ‘பீகார் பின்னோக்கிச் செல்லாது, இந்த நிலமானது போராட்டங்களின் சோதனைக் கூடமாகும், மாற்றம் தவிர்க்க முடியாதது’ என்றார்.
அந்த பெருந்திரள் நிகழ்ச்சியின் துவக்கத்தில், கலாச்சார, புரட்சிகர பாடல்கள் பாடப்பட்டன. அந்தப் பாடல்களால் அங்கு கூடியிருந்த மக்கள் உத்வேகம் பெற்று போராட்டச் செங்கொடியை உயர்த்திப் பிடித்தார்கள். பீகாரை மாற்றுவோம் முழக்கம் காந்தி திடல் முழுவதும் எதிரொலித்தது. அது அங்கு குழுமியிருந்த மக்களிடத்தில் நம்பிக்கை ஒளியையும் அநியாயங்களைப் பார்த்துக் கொண்டு இனி பீகார் மக்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள், மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. பல்வேறு தரப்பு, பிரிவு மக்களும் அமைப்புகளும் ஒன்றிணைந்து ஒரே சக்தியாக கூடியிருந்தார்கள்.
திட்டத் தொழிலாளர்கள், ஆஷா, அங்கன்வாடித் தொழிலாளர்கள் பெருமளவில் அணி திரண்டனர். பூனம் தேவி, அஞ்சுஷா தேவி உள்ளிட்ட தலைவர்கள் உரையாற்றினார்கள். பள்ளிக்கூட சமையல் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக சரோஜ் சௌபே, தியாகிகளின் துணைவியர் சங்கத்தின் சார்பாக மீட்டா தேவி ஆகியோர் உரையாற்றினர்.
பம்ப் ஆப்பரேட்டர்கள் சங்கம், பீகார் முற்போக்கு மின்சாரத் தொழிலாளர்கள் சங்கம், பீகார் மாநில மோட்டிவேட்டர்கள் சங்கம், பீகார் மாநில தூய்மைப் பணி மேற்பார்வையாளர் மற்றும் தொழிலாளர்கள் சங்கம், அமைப்பாக்கப்படாத தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்களில் இருந்து பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.
இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வில், அய்சா, அய்ப்வா, ஆர்ஒய்ஏ, ஏஐசிசிடியு, ஏஐபிஎப், அய்லாஜ், அயர்லா, இன்ஷாப் மஞ்ச், ஏஐகேஎம், சமூக நீதி இயக்கம் உள்ளிட்ட பல அமைப்புகளும் கலந்து கொண்டு சமூக நீதி, பெண்களின் உரிமைகள், கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக குரல் எழுப்பினர்.
பீகாரில் கடந்த இருபது ஆண்டுகளாக, ஆட்சியில் உள்ள தேஜகூ ஆட்சியான இரட்டை புல்டோசர் ஆட்சியாக, மக்களின் விருப்பங்களை நசுக்கி, கார்ப்பரேட்டுகளின் நலன்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைகள் ஓரங்கட்டப்பட்டுவிட்டன. அத்த கூலிக்கு ஆள் கிடைக்கும் இடமாக பீகார் மாற்றப்பட்டுவிட்டது. இதற்கு வரவிருக்கும் பீகார் சட்டமன்றத் தேர்தலில் பதிலடி கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.
1857 முதல் சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து ராஜ்வார் கலகம் வரையிலும், ஜமீன்தார் ஒழிப்பு இயக்கங்கள் மற்றும் பல்வேறு போராட்டங்களை சோசலிஸ்ட்களும் கம்யூனிஸ இயக்கங்களும் தலைமை ஏற்று நடத்தினேர். பீகார் கலகக் குரல்களின் தொட்டில் ஆகும். அந்த மரபை உயர்த்திப் பிடிக்க காந்தி திடலில் தீர்மானிக்கப்பட்டது.

மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2025 மார்ச் 1 - 15*

தொகுதி 23 இதழ் 14

முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**

**பாலசுந்தரம்**

**அ. சந்திரமோகன்**

**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com



# தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கவே தொகுதிகள் மறுசீரமைப்பு!

ஒன்றிய பாசிச பாஜக மோடி அரசு தன்னுடைய ஒரே நாடு, ஒரே மொழி திட்டத்தை அமல்படுத்திட பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறது. பாஜகவிற்கு தனிப் பெரும்பான்மை இல்லாத போதும் நிதிஷ்குமார், சந்திரபாபு ஆதரவில் ஆட்சியிலிருக்கும் நிலையிலும் மோடி அரசு, சங்பரிவார ஆர்எஸ்எஸ் சனாதன, மனுஸ்மிருதித் திட்டத்தை அமல்படுத்துவதில் அதிவேகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கான நிதியைத் தர வேண்டும் என்று சொன்னால், தேசிய புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்திட வேண்டும், தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை அமல்படுத்திட வேண்டும் என்று நிபந்தனைகள் போடுகிறது மோடி அரசு. இந்தியாவெங்கும் பல மாநிலங்களின் தாய் மொழிகள் ஹிந்தியால் அழிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தமிழ்மொழியை அழிக்க மும்மொழித் திட்டம் என்று பேச ஆரம்பித்துள்ளது மோடி அரசு. தொடர்ந்து தமிழ்நாட்டு மக்கள் இதற்கு எதிராகவும் பாஜகவின் சனாதனத்திற்கு எதிராகவும் தொடர்ந்து போராடி வரும் நிலையில், அடுத்த நடவடிக்கையாக நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள் தொகை அடிப்படையில் மறு சீரமைப்பு செய்யப் போவதாக அறிவித்துள்ளது மோடி அரசு. தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் மறு சீரமைப்புச் செய்யப்படுமானால், தமிழ்நாட்டிற்கு ஏற்கனவே உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகள் என்பது 31 தொகுதிகளாகக் குறையும். ஒன்றிய அரசு கொண்டு வந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை சிரமேற்று அமல்படுத்தியது தமிழ்நாடு அரசு. உத்திரபிரதேசம் போன்ற வட மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் முறையாக அமல்படுத்தப்படவில்லை. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்கான பிரதிநிதிகளைக் குறைத்துவிட்டு, உ.பி. போன்ற மாநிலங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் வழங்கி தங்களின் திட்டத்தை, கொள்கைகளை எதிர்ப்பே இல்லாமல் அமல்படுத்திடலாம் என்று நினைக்கிறது மோடி அரசு. இந்த தொகுதி மறுசீரமைப்பு மூலம் பாதிக்கப்படப் போவது தமிழ்நாடு மட்டுமின்றி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற தென் மாநிலங்களும்தான். கார்ப்பரேட் சாமியார் ஜக்கியின் ஆடல் பாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கோவை வந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தொகுதி மறு சீரமைப்பினால், தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களுக்கு ஏற்கனவே இருக்கும் தொகுதிகள் எதுவும் குறையாது என்றார்.

**தொடர்ச்சி 17ம் பக்கத்தில்..**



# தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுப்போம்! போர்க்குணமிக்க, புரட்சிகர தொழிலாளர் போராட்ட இயக்கத்தைக் கட்டி எழுப்புவோம்! ஏஜசிசிடியு: 11வது அகில இந்திய மாநாடு மாபெரும் வெற்றி!

அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சிலின் 11 வது அகில இந்திய மாநாடு 2025 பிப் 24 அன்று காலை பொது மாநாட்டுடன் புது டெல்லியில் துவங்கியது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடன் டெல்லியின் மிகப்பெரிய அரங்கமான தால்கதோரா அரங்கம் நிரம்பி வழிந்தது. பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்பாக்கப்பட்ட - அமைப்பாக்கப்படாத தொழிலாளர்கள், பொதுத்துறை - தனியார் துறை தொழிலாளர்கள் பொது அமர்வில் கலந்து கொண்டனர். நாடு முழுவதிலும் இருந்து வந்த மாநாட்டு பிரதிநிதிகளும் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர்.

''தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுப்போம்'', ''இந்த நாடு எமக்கு சொந்தம், நாங்கள் இந்நாட்டின் குடிமக்கள்'' என்பன பொது மாநாட்டின் மையப் பொருளாக இருந்தன.

பொது மாநாட்டுக்கு அகில இந்திய தலைவர் தோழர் சங்கர் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் ராஜீவ் டிம்ரி பொது அமர்வின் மையப் பொருளை அறிமுகப்படுத்தி பேசினார். சுச்சேதா டே - மைத்ரேயி பொது மாநாட்டை நெறிப்படுத்தும் பணியாற்றினர்.

பொது மாநாட்டுக்கு வந்தவர்களை வரவேற்றுப் பேசிய ஏஐசிசிடியு டெல்லி தலைவர் சந்தோஷ் ராய் நாட்டின் அதிகாரம் தொழிலாளர்களின் கைக்கு மாற வேண்டும், செல்வத்தை உருவாக்கும் ஆலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புர முறை சாராத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றார்.

மாநாட்டைத் துவங்கி வைத்துப் பேசிய சிபிஐ (எம்எல்) கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர், தான் ஏஐசிசிடியு பொதுச் செயலாளராக இருந்த போது 1998ல் இதே டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டை நினைவு கூர்ந்தார். அப்போது இருந்த சிறந்த தோழர்கள் தற்போது நம்மிடையே இல்லை என வருத்தம் தெரிவித்தார். நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன்னால், அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னால், தொழிலாளர் நிலை எப்படி இருந்ததோ அதே போன்ற நிலை தற்போது நிலவுகிறது. போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப்படுகின்றன. 8 மணி நேர வேலை உரிமை பறிக்கப்படுகிறது, சமத்துவம், தொழிலாளர் கவுரவம் பறிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் 12 மணி நேரம் வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். தொழிலாளர்கள் உரிமையற்றவர்களாக, சமத்துவமற்றவர்களாக, கவுரவமற்றவர்களாக நின்று கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்களின் எதிர்காலம், நாட்டின் எதிர்காலம் மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறி இருக்கிறது. மிக நீண்ட போர்க்களத்திற்கு நாம் தயாராக வேண்டி இருக்கிறது.

எப்பொழுதெல்லாம் நலிந்த மக்கள், தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை கேட்கிறார்களோ அப்போதெல்லாம் ஆளும் வர்க்கம் அச்சம் கொள்கிறது. ஏனென்றால், அவர்கள் கல்வி வேண்டும், சுகாதாரம் வேண்டும், சமத்துவம் வேண்டும், கவுரவம் வேண்டும் என கேட்பார்கள் என அச்சம் அடைகிறது. எனவே தொழிலாளர் வர்க்கம் போராடும் போதெல்லாம் அவர்கள் முதலாளித்துவ அரசால் நசுக்கப்படுகின்றனர், ஒடுக்கப்படுகின்றனர். ஆனால், தொழிலாளர்கள் அதற்கு எதிராக எழுந்து நின்று போராடுகிறார்கள். இவ்வுலகின்,

இந்நாட்டின் சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள். இந்த உலகம் நம்முடையது. ஆளும் வர்க்கங்கள் தொழிலாளர்களை, அவர்களின் பங்களிப்பை கவுரவிப்பதற்குப் பதிலாக அவர்களின் குடிசைகள் புல்டோசரால் இடித்துத் தள்ளப்படுகின்றன. தரைமட்டமாக்கப்படுகின்றன. இந்தியத் தொழிலாளர்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப் படுகின்றனர். இந்தியத் தொழிலாளர்கள் இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலை போர் முனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆன பிறகும், மீண்டும் நமது உரிமைகளுக்காக, கல்விக்காக, சுதந்திரத்திற்காக போராட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இந்த நாடு நம்முடையது. உழைக்கும் மக்களுக்குச் சொந்தமானது. அதை நம்முடையதாக்கிட நாம் மீண்டும் போராடியாக வேண்டி இருக்கிறது.

நாம் நம் உரிமைகளுக்காகப் போராடிட வேண்டும். பெண் தொழிலாளர் உரிமை, பாதுகாப்பு, பணியிட உரிமைகளுக்காக போராடிட வேண்டும். அநியாயத்துக்கு எதிராக போராடிட வேண்டும். இந்து - முஸ்லீம் பிரிவினைவாதத்திற்கு எதிராக, மதவெறிக்கு எதிராக, வெறுப்பு அரசியலுக்கு எதிராக போராடிட வேண்டும். மக்கள் ஒற்றுமை காத்திட போராடிட வேண்டும். நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து தோழர்கள் இங்கு வந்திருக்கின்றனர். அவர்கள்தான், மக்கள்தான், மக்கள் போராட்டங்கள் தான் நமது ஒரே நம்பிக்கை. உரிமைகளுக்காக குரல் கொடுப்போம். மக்கள் ஒற்றுமைக்காக குரல் கொடுப்போம். ஒன்று படுவோம். போராடுவோம். போராட்டங்கள் தொடரட்டும். ஏஐசிசிடியு போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடிக்கட்டும்.

மதவெறுப்பிற்கு எதிராக, சாதியத்திற்கெதிராக, சுரண்டலுக்கெதிராக நாம் எழுந்து நிற்க வேண்டும் என உரையாற்றி, மாநாடு வெற்றி பெற வாழ்த்தி, மாநாட்டைத் துவங்கி வைத்தார்.

ஏஐசிசிடியு இணைந்துள்ள ‘உலக தொழிற்சங்கக் கூட்டமைப்பின் (WFTU)’ கவுரவத்தலைவர் ஜார்ஜ் மேவ்ரிக்கோஸ் மாநாட்டில் கலந்து கொள்ள வருவதாக இருந்தது. ஆனால், மோடி அரசு அவருக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. அதனால், அவருடைய உரை வாசிக்கப்பட்டது. அய்ரோப்பிய ஒன்றியம், அமெரிக்காவின் ஆதரவோடு பாலஸ்தீன மக்களைக் கொன்று வருகிறது இஸ்ரேல். போராட்டங்களே உலகெங்கும் உள்ள மக்களின் வரலாறாக உள்ளது; முதலாளித்துவ சுரண்டலை எதிர்த்து நாம் போராட வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

நேபாள தொழில்முறையாளர் பெருங்-கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிருஷ்ணமன் சிரேஷ்தா, பொருளாளர் த்ரூபா பிரசாத், நேபாள தொழிற்சங்கங்களின் பொது கூட்டமைப்பின் (ஜி இ எஃப் ஒ என் டி) செயற்குழு உறுப்பினர் தோழர் கே.சி. பூர்ணா, மண்டல கமிட்டி உறுப்பினர் பதம் ரிஜால், பங்களாதேஷ் தொழிற்சங்க மையத்தின் அயலுறவுத் துறை செயலாளர் மகபூபர் ரகுமான் மொஜ்னு, டாக்கா மாநகர பொதுச் செயலாளர் இத்ரிஸ் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரான்ஸ் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் சார்ந்த தொழிற்சங்க தலைவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர். அஸ்ஸாம் ஆசிரியர் சங்கமும், பாதுகாப்புத் துறை சங்கங்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர்.

ஐஎன்டியுசி, ஏஐடியுசி, சிஐடியு, டியுசிசி, ஏஐயுடியுசி, யுடியுசி உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

ஐஎன்டியுசி துணைத்தலைவர் அசோக் சிங் பேசுகையில், மோடி அரசு தொழிலாளர்களுக்கு அநியாயம் இழைத்து வருகிறது. எந்த விவாதமும் இல்லாமல் தொழிலாளர் விரோத சட்டங்கள் இயற்றப்படுகின்றன. பண வீக்கத்தால் உண்மை ஊதியம் குறைகிறது. தொழிலாளர்கள் மற்றுமொரு போருக்குத் தயாராக வேண்டும் என்றார்.

ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர், பன்முகத்தன்மையை காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில், “இந்த நாடு நம்முடையது, நமக்குச் சொந்தமானது” என்கிற மாநாட்டின் முழக்கம் மிகப் பொருத்தமானது என்றார். மேலும் அவர், தொழிலாளர் சட்டத்தொகுப்பு அமல்படுத்தப்பட்டால், நாடெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள். செல்வத்தை உருவாக்கும் தொழிலாளர்கள், அந்த செல்வத்தை பெற முடியாத நிலையை மாற்றிட, தமது பங்கை பெற்றிட போராட்டத்தில் குதிப்பார்கள் என்றார்.

சிஐடியு அகில இந்திய செயலாளர்களில் ஒருவரான கே என் உமேஷ், முதலாளித்துவம் தனது நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக நவதாராளவாத கொள்கைகளை செயல்படுத்தியது, அதன் மூலம், தனது நெருக்கடியை உழைக்கும் வர்க்கத்தின் மீது சுமத்துகிறது என்றார்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் கரம் கோர்த்து முதலாளித்துவ தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்றார்.

ஏஐயுடியுசி அகில இந்திய செயலாளர் ரமேஷ் பரஷார் தனது உரையில் அதிகரித்து வரும் ஏகாதிபத்திய தாக்குதல்கள் பற்றி குறிப்பிட்டு, பாசிசத்தை வீழ்த்த வேண்டியதன் அவசியத்தை விளக்கினார். இன்றைய புறநிலைகளைநோக்கும் போது, பொருளாதாரப் போராட்டங்கள் மட்டுமல்ல, அரசியல் போராட்டங்களையும் நடத்திட வேண்டிய அவசியம் உள்ளது என்றார்.

யுடியுசி பொதுச் செயலாளர் அசோக் கோஸ் பேசுகையில் இந்த மாநாடு ஒரு புதிய பாதையை காட்டும் என நம்பிக்கை தெரிவித்தார். வாழ்வதற்கான உரிமை நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும். அதை அடைந்திட நாம் செம்பதாகை தாங்கி அணிவகுப்போம் என்றார்.

டியுசிசி தலைவர் இந்து பிரகாஷ் மேனன், தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான மோடி அரசின் தாக்குதல்களுக்கு எதிராக அனைத்து சங்கங்களும் ஒன்றுபட்டு தீவிரமாக போராட வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினார்.

பொருளாதார அறிஞர் அதுல் சூட், நவதாராளவாதக் கொள்கைகள், தொடர்ச்சியான வேலையின்மை, அதிகரித்து வரும் முறை சாராத் தன்மை, முதலாளித்துவச் சுரண்டல், தொழிலாளர்களும் தொழிலாளர் துறைகளும் காணாமல் போகும் நிலை போன்றவை தொழிலாளர்கள் சந்திக்கும் முக்கிய சவால்கள் என குறிப்பிட்டார்.

தூய்மைப் பணியாளர் இயக்கத்தைச் சார்ந்த பேஜ்வாடா வில்சன், இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு எனக் குறிப்பிட்டார். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே சுரண்டலுக்கு எதிராகவும் மதச்சார்பின்மைக்காகவும் போராட முடியும். நாட்டின் வளங்களை கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிக்கின்றனர். தூய்மைப் பணியாளரின் குழந்தையும் அத் தொழிலையே செய்ய வேண்டிய அவல நிலையை அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர் இயக்கம்தான் நாட்டின் நம்பிக்கை எனக் கூறினார்.

அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜாராம் சிங், பாலஸ்தீனத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தார். இந்தியத் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டதற்கு தனது எதிர்ப்பை தெரிவித்தார். அரசமைப்புச் சட்டத்தை மாற்றிட, அதற்காக மிருகப் பெரும்பான்மையப் பெற்றிட பாஜக துடிதுடிக்கிறது. அனைத்து துறைகளையும் கார்ப்பரேட்டுகளுக்குத் தாரை வார்க்கிறது. சுரண்டலுக்கு முடிவு கட்ட தொழிலாளர்களின் போராட்ட ஆற்றலை மேலும் அதிகரிக்க வேண்டும், தொழிலாளர் - விவசாயி ஒற்றுமை பலப்பட வேண்டும் என்றார்.

இகக(மாலெ) நாடாளுமன்ற உறுப்பினர் சுதாமா பிரசாத், புதிய தொழிலாளர் சட்டங்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களை அதிகரிக்கிறது. தொழிலாளர்களுக்கு எதிர்காலத்தை நிச்சயமற்றதாக்குகிறது. ஆனால், அதற்கெதிராகப் போராடக் கூடிய பலம் தொழிலாளர்களிடம் உள்ளது என்றார்.

பீகார் மாநில மேல் சபை உறுப்பினரும், அகில இந்திய திட்டத் தொழிலாளர்கள் கூட்டமைப்பின் செயலாளருமான சசி யாதவ், ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு உள்ளிட்ட திட்டத் தொழிலாளர்கள் பணிநிரந்தரம் பெற வேண்டும் என்றார். பணப் பலன்கள் பெற திட்டத் தொழிலாளர்கள் நாடு முழுவதும் நடத்தி வரும் போராட்டங்களை விளக்கினார். நாடு முழுவதும் போராட்டங்களுக்குப் பெண்கள் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள், இது மேலும் தொடரும் என்றார்.

சில்க்யாரா சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டவர்களைக் காப்பாற்றிய தொழிலாளியான வகீல் ஹசன் மாநாட்டில் உரையாற்றினார். அவருடைய வீட்டையும்கூட மோடி அரசு புல்டோசர் கொண்டு இடித்துத் தள்ளிவிட்டது என்றார். நாட்டிலுள்ள சமத்துவமின்மை பற்றியும், அதற்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசினார்.

அகில இந்திய ரயில்வே கூட்டமைப்பின் சர்வஜித் சிங், ரயில்வே தனியார் மயமாக்கம் மற்றும் ஒப்பந்தமயமாக்கத்திற்கு எதிராகப் பேசினார். ரயில்வே துறையில் ஏஐசிசிடியுவில் இணைக்கப்பட்ட கூட்டமைப்பு ஒரே இடதுசாரி கூட்டமைப்பாக எழுந்து வருவதை, ஏஐஆர்எஃப், என்எஃப்ஐஆர் சங்கங்களுக்கு மாற்றாக சமீபத்திய சங்க அங்கீகாரத் தேர்தலில் வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டார். பிஎம்எஸ் சில் இணைந்த சங்கம் நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டதையும் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை என்பதையும், அதன் மூலம் ரயில்வே தொழிலாளர்கள் மதவெறி அரசியலைப் புறக்கணித்து விட்டார்கள் என்றும்

குறிப்பிட்டார்.

அகில இந்திய முனிசிபல், தூய்மைப் பணியாளர் சங்கத்தின் செயல் தலைவர் நிர்மலா, தூய்மைப் பணியாளர்கள் சாதி, ஆணாதிக்கம், வர்க்கம் ஆகிய மூன்று வகையிலும் ஒடுக்கப்படுகிறார்கள், அதற்குக் காரணமாக உள்ள கட்டமைப்புகள் நொறுக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

புறக்கணிப்பு, விலக்கம் மற்றும் தடைகளுக்கான இயக்கத்தின் பிரதிநிதி அபூர்வா கவுதம், பாலஸ்தீன மக்கள் போராட்டம் பற்றி உரையாற்றினார்.

**சில முக்கிய தீர்மானங்கள்**

உலகத் தொழிற்சங்க கூட்டமைப்பின் கவுரவ தலைவர் ஜார்ஜ் மேவ்ரிகோஸ் அவர்கள் டெல்லி வந்து ஏஐசிசிடியுவின் 11வது அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்ள கோரிய விசாவை வழங்க மறுத்த ஒன்றிய பிஜேபி அரசை மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

மாநாட்டு வளாகத்தில் பாஜக - ஆர்எஸ்எஸ்ஸின் வெறுப்பு அரசியலுக்கு எதிரான பதாகைகளோடு, பாலஸ்தீன மக்கள் போராட்டத்திற்கு ஒருமைப்பாடு தெரிவிக்கும் பதாகையும் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், டெல்லி பிஜேபி அரசின் காவல்துறை அந்த ஒருமைப்பாட்டுப் பதாகையை, மாநாடு துவக்க நாளன்று காலை, எவ்வித விளக்கமும் சொல்லாமல் கிழித்து எறிந்ததற்கு மாநாடு கண்டனம் தெரிவித்தது.

தமிழகத்தில் பொய்வழக்கில் தண்டிக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளாக சிறையில் வாடும் பிரிக்கால் தொழிற்சங்கத் தலைவர்கள் மணிவண்ணன் - ராமமூர்த்தியை விடுதலை செய்யக் கோரி ஒரு விரிவான இயக்கத்தைக் கட்டமைக்க வேண்டும் என மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக நடக்கவிருக்கும் அகில இந்திய தொழிலாளர் மாநாட்டையும், வேலை நிறுத்தத்தையும் வெற்றிகரமாக்கிட மாநாடு உறுதி பூண்டது.

**பிரதிநிதிகள் மாநாடு**

பொது அமர்வு முடிந்த அன்று மாலை பிரதிநிதிகள் அமர்வு துவங்கியது. தோழர் வீ.சங்கர் மாநாட்டுத் தலைமைக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர்கள் சோ பாலசுப்பிரமணியன் (புதுச்சேரி), டி சங்கரபாண்டியன் (தமிழ்நாடு), அருணா (ஆந்திரா), நிர்மலா (கர்நாடகா) சசி யாதவ், சரோஜ் சௌபே (பீகார்) உள்ளிட்ட 15 பேர் கொண்ட தலைமைக்குழு மாநாட்டிற்குத் தலைமை தாங்கியது.

அகில இந்திய துணைத் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன் அஞ்சலிக் குறிப்பை முன் வைத்தார். கடந்த 10வது மாநாடு முதல் தற்போதைய 11வது மாநாடு வரை உயிர் நீத்த தோழர்களுக்கு அஞ்சலி தெரிவித்த மாநாடு, சமீபத்தில் உயிர் நீத்த தமிழக தோழர்கள் திருநாவுக்கரசு, குகானந்தன் ஆகியோருக்கும் இரங்கல் தெரிவித்தது.

ஏஐசிசிடியு அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி மாநாட்டு நகல் அறிக்கையை முன் வைத்தார்.

இரண்டாம் நாள் அமர்வு பிப் 25 காலை தோழர் ஸ்வப்பன் முகர்ஜி நகரில், தோழர் என்.கே.நடராஜன் - ராம்கிஷண் அரங்கத்தில் ஆரம்பமானது. மாநாட்டு மேடைக்கு தோழர்கள் முன்னா யாதவ் - ஓம் பிரகாஷ் சர்மா பெயர் இடப்பட்டிருந்தது. பிரதிநிதித் தோழர்கள் மாநாட்டு அறிக்கையின் மீது தங்கள் கருத்துகளை முன்வைத்தார்கள்.

மூன்றாம் நாள் காலையில் பொதுச் செயலாளர் ராஜீவ் டிம்ரி தொகுப்புரை வழங்கினார். அதை ஏற்றுக்கொண்ட மாநாடு, வேலை அறிக்கையை ஏகமனதாக நிறைவேற்றியது.

அதைத் தொடர்ந்து ஏஐசிசிடியு அகில இந்தியத் தலைவர் தோழர் வீ.சங்கர் மாநாட்டை முடித்து வைத்து உரையாற்றினார்.

மாநாட்டில் 229 பேர் கொண்ட தேசியக் கவுன்சில் தேர்வு செய்யப்பட்டது. தேசிய கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சுமார் 20 சதவீதம் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதில் மூன்றில் ஒரு பங்காக 78 பேர் கொண்ட மத்திய செயற்குழுவும் 37 பேர் கொண்ட நிர்வாகிகள் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

தோழர் வீ.சங்கர் அகில இந்திய தலைவராகவும், தோழர் ராஜீவ் டிம்ரி அகில இந்திய பொதுச் செயலாளராகவும் மீண்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சார்ந்த தோழர்கள் சோ.பாலசுப்பிரமணியன், டி சங்கரபாண்டியன், சொ இரணியப்பன், கே.ஜி. தேசிகன், எஸ்.எம்.அந்தோணிமுத்து ஆகியோர் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகிகளோடு கூடுதலாக தோழர்கள் கோவை கே. பாலசுப்பிரமணியன், சுசீலா, பால்ராஜ், அதியமான் ஆகியோர் மத்திய செயற்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சார்ந்த மொத்தம் 31 பேர் தேசியக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகிகள் மற்றும்

மத்திய செயற்குழு உறுப்பினர்களோடு கூடுதலாக தோழர்கள் ஜி.ரமேஷ் (வழக்கறிஞர்), கார்மெல் (குமரி), கோவிந்தராஜ் (தர்மபுரி), ராஜன் (தஞ்சை), வேல் முருகன் (சேலம்), வேல் முருகன் (தென்காசி), சிம்புதேவன் (வேலூர்), சகாயம் (தூத்துக்குடி), வெங்கடேசன் (நாமக்கல்), சிவராஜ் (புதுகை), ரவி (திண்டுக்கல்), கணேசன் (நெல்லை), ஆபிரகாம் (சென்னை), அம்ஜத் (தூத்துக்குடி), மதியழகன் (கும்பகோணம்), ரவி (மாதவரம்), பிலோமினா (கோவை), முத்து கிருஷ்ணன் (திருப்பூர்), முருகன் (மின் வாரியம்), சுனில் குமார், தனலட்சுமி (குமரி), புருசோத்தமன் (புதுச்சேரி) ஆகியோர் தேசிய குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் உரிமையை மீட்டெடுத்திட, சாதி வெறிக்கெதிராக, மதவெறிக்கெதிராக போராடிட, அரசமைப்புச் சட்டத்தை, ஜனநாயகத்தை பாதுகாத்திட, கார்ப்பரேட் முதலாளித்துவ, மதவெறி, மனுவாத மோடி - பிஜேபி அரசை தூக்கி எறிந்திட உறுதி பூண்டது மாநாடு.

அந்தச் சூளுரையை நிறைவேற்றும் போராட்டத்தில், நாடு தழுவிய போர்க்குணமிக்க, புரட்சிகர தொழிலாளர் போராட்ட இயக்கத்தைக் கட்டி எழுப்புவதில் தொழிலாளர்கள் முன்னணிப் படையாக திகழ்வோம், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களோடு கரம் கோர்ப்போம் என உறுதி ஏற்று, வீர முழக்கமிட்டு ஏஐசிசிடியுவின் 11வது அகில இந்திய மாநாடு வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# போர்க்குணமிக்க, தீவிரமான தொழிலாளர் இயக்கத்தைக் கட்டமைப்போம்!

2025 ஆம் ஆண்டில் மோடி அரசு தொழிலாளர் வர்க்கத்தின் மீது ஒரு விரிவான தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளது. தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை அமல்படுத்துவது, அரசு மற்றும் பொதுத்துறைகளை கண்மூடித்தனமாக தனியார் மயமாக்குவது, எதிர்ப்புக் குரலை ஒடுக்குவதற்கு மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது ஆகியவை மோடி அரசின் போர்த்தந்திரமாகும். அதனை, தொழிலாளர் சட்டத் தொகுப்புக்கு எதிரான போராட்டத்தின் மூலம், தொழிலாளர்கள், விவசாயிகள் ஒன்றிணைந்த இயக்கத்தின் மூலம் எதிர்கொள்வது என்பது தொழிலாளர் இயக்கத்தின் போர்த் தந்திரம் ஆகும். ஏஐசிசிடியு உள்ளிட்ட அனைத்து மைய தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. ஏப்ரல் 1 முதல் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை மோடி அரசு அமல்படுத்துமானால், தொழிலாளர்களும் விவசாயிகளும் இணைந்து நாட்டின் சக்கரங்களை இயங்கவிடாமல் நிறுத்துவார்கள்.

"தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுப்போம்" என்பதுதான் இம்மாநாட்டின் மைய முழக்கமாகும். மோடி அரசு உரிமைகளைப் பறிக்கும் போது, தொழிலாளர் வர்க்கம் போராட்டத்தாலும் தியாகத்தாலும் அவற்றை மீட்டெடுக்கும்.

தொழிலாளர்கள் மீது மோடி அரசு தொடுக்கும் தாக்குதல்களின் பின்னணியில், மாறிக் கொண்டிருக்கும் புறநிலையின், தொழிலாளர் வர்க்க இயக்கத்தின், பல்வேறுபட்ட தன்மைகளையும், சில முக்கிய பிரச்சனைகளையும் மாநாட்டு அறிக்கை கோடிட்டுக் காட்டியுள்ளது. நாட்டில் கிக் தொழிலாளர்களும், இணையம்சார் பொருளாதாரத் தொழிலாளர்களும்தான் வருங்காலத்தில் இருக்க வேண்டும் என்பதுதான் மோடியின் கனவு. கிக் மற்றும் இணைய தளம் சார் பொருளாதாரத்தில் தொழிலாளர் உறவு என்பது அடிமை முறை என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

கிக் மற்றும் இணையம் சார் வேலை என்றால் வீட்டிற்கு வந்து பொருள்களை வழங்கும் தொழிலாளர்கள், உபர், ஓலா ஓட்டுநர்கள் என்கிற எண்ணம்தான் நம்மிடம் உள்ளது. அது உண்மை அல்ல. கட்டுமானம், வீட்டு வேலை, தூய்மைப் பணி, தோட்ட வேலை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் கிக் மாதிரி பொருளாதாரமும் வேலைமுறையும் பரவி வருகிறது. முறைசார்ந்த, முறைசாராத் தொழில்களுக்கிடையே, அமைப்பாக்கப்பட்ட, அமைப்பாக்கப்படாத தொழில்களுக்கிடையேயான




## (2025 பிப் 24-26-ல் தில்லியில் நடைபெற்ற ஏஜசிசிடியு 11 வது அகில இந்திய மாநாட்டில், அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர் ஆற்றிய நிறைவுரை)

எல்லைக்கோடுகள் மங்கிக் கொண்டிருக்கின்றன. வருங்காலத் தொழிலாளி, தொழிலாளர்கள் தானாகவே முன்வந்து நிரந்தர வேலைவாய்ப்பை நிராகரிப்பார்கள் என்கிறார் மோடி. மோடியின் இந்தக் கனவுக்கு எதிராக தொழிலாளர்கள் நிரந்தரமான, நிலையான வேலைக்காகப் போராடுகிறார்கள். மாறிக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில், நிலையான வேலைக்கான கோரிக்கை முக்கிய பிரச்சனையாக முன்வந்து கொண்டிருக்கிறது.

கிக் தொழிலாளர்களை தொழிலாளர்கள் என்று அழைக்காமல், பங்குதாரர்கள், அதிகாரிகள், குறுகிய கால ஒப்பந்தக்காரர்கள் (தொழிலாளர்கள் அல்ல) என்று அழைக்கிறார்கள். அவர்களுக்கு முதலாளியும் கிடையாது, தொழிலாளர் உரிமைகளும் கிடையாது. அது மட்டுமல்ல வேலை நேரம், வேலை செய்யும் குறிப்பிட்ட இடம் கிடையாது, இருப்பிடம் கிடையாது, குறைந்தபட்ச கூலி கூலி கிடையாது, முறைப்படுத்தப்பட்ட பணி நிலைமைகள் எதுவும் கிடையாது. மோடி தன்னுடைய கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சேவை செய்திட, எதிர்காலம் நிச்சயமற்ற தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதுதான் மோடியின் 'கனவு மாதிரி' ஆகும்.

அடிமைத்தனத்திற்கெதிராக கவுரவமான வேலைக்காக, தலித்துகள் மற்றும் இதர அடித்தட்டு மக்கள் மீதான சாதியப் பாகுபாட்டிற்கெதிராக, பெண்களின் சமூக கவுரவம், அவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, சமமற்ற கூலி ஆகியவற்றுக்கு எதிராக, பாலின சமத்துவம், வீடு, வீட்டுமனை போன்றவையே இன்றைய தொழிலாளர் வர்க்கத்தின் முக்கிய பிரச்சனைகள் ஆகும். வேலை, கூலி, சமூகப்பாதுகாப்பு, பணிநிலைமைகள் போன்றவற்றுக்காக மட்டுமே தொழிலாளர் இயக்கம் போராடிக் கொண்டிருந்த காலம் போய், பொருளாதாரத்திற்கான போராட்டங்களுடன் வேலையில் கவுரவம், நிலைத் தன்மை, தொகுப்புச் சட்டம் திரும்பப் பெறுவது உள்ளிட்ட அரசியல் கோரிக்கைகளுக்கும் சேர்த்து போராட்டங்கள் நடத்தும் அவசியம் உள்ளது.

நவதாராளவாத சீர்திருத்தங்களின் அமலாக்கம் தொழிலாளர்களின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. நிரந்தரத் தொழிலாளர் சக்தி வெகுவாக குறைக்கப்பட்டு, முறைசாராத் தொழில்களில் மட்டுமின்றி முறை சார்ந்த துறைகளிலும் ஒப்பந்த, தினக்கூலி, தற்காலிகத் தொழிலாளர்கள் எண்ணிக்கை பெரும்பான்மையாகிவிட்டது. பல தொழில்களிலும் முறைசாரா, நிரந்தர மற்ற தொழிலாளர் சக்தியே ஆதிக்கம் செலுத்துகிறது அல்லது அதிகரிக்கிறது. அந்த மாதிரியான சூழ்நிலையில், வாழ்க்கையில் நிலைத் தன்மைக்காக ஒரு நிரந்தரமான வேலை என்பது மிகமுக்கியமான கோரிக்கையாகும். தொழிலாளர் சட்டத் தொகுப்போ அதை சட்டபூர்வமாகவே நீக்கப் பார்க்கிறது.

இப்பவும் கூலிப் பிரச்சனைதான் தொழிலாளர் வர்க்கத்தின் முதன்மையான பிரச்சனையாகத் தொடர்கிறது. கூலி அதிரிக்க தொழிற்சாலை மட்டத்திலும் மாநில மட்டத்திலும் போராடிக் கொண்டிருக்கிறோம். தேசிய குறைந்தபட்சக் கூலிக்கான கமிட்டி, பிராந்திய ரீதியாக குறைந்தபட்ச மாதச் சம்பளம் ரூ.10,000 என பரிந்துரைத்தது. தற்போதைய தரை மட்டக் கூலி ரூ.5000 என்று இருப்பதாலும் மோடியின் கார்ப்பரேட் நண்பர்களுக்கு லாபம் குறைந்துவிடும் என்பதாலும் அந்த கமிட்டியே கலைக்கப்பட்டுவிட்டது. மற்றொரு கமிட்டி போடப்பட்டுள்ளபோதிலும் அது தன்னுடைய அறிக்கையை இன்னும் தாக்கல் செய்யவில்லை.

உண்மைக் கூலி குறைந்து கொண்டே வருகிறது. அறிவிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலியும் உண்மைக் கூலி குறைந்து கொண்டே

போவதை ஈடுகட்டவில்லை. அரசாங்கம் இப்போது "வேலையில் வறுமை" என்கிற புதிய சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. ஒருவர் வேலையில் இருந்தாலும்கூட அவரின் வறுமை ஒழிந்திடவில்லை. சுதந்திர இந்தியாவில் வருமான சமத்துவமின்மை என்பது ஆங்கிலேய காலனியாதிக்கத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது.

தொழிலாளர் வர்க்க இயக்கம் எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சனை மத வெறுப்பும் வன்முறை அரசியலும் ஆகும். மோடி அரசாங்கமும் ஆர்எஸ்எஸ்-சும் சமூகத்தின் மதச்சார்பற்ற தன்மையை நாசமாக்க அனைத்து வழிகளிலும் முயற்சிக்கின்றன. மதவெறி என்பது சமூக மனோநிலையாக உள்வாங்கப்படுகிறது. மதப் பிரிவினை மற்றும் வெறுப்பு அரசியலுக்கு எதிராகவும் ஒன்றிணைந்து போராட வேண்டிய கடமை தொழிலாளர் வர்க்கத்தின் தோளில் சுமத்தப்பட்டுள்ளது.

நாம் தூய்மை பணியாளர்கள் போன்ற மிகவும் பின்தங்கிய, அமைப்பாக்கப்படாத தொழிலாளர்களை அணிதிரட்டுகிறோம். நம்முடைய நகராட்சி மற்றும் தூய்மைப் பணியாளர் கூட்டமைப்பு தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு விரிவடைந்துள்ளது. பூனா, மகாராஷ்டிரா, பீகார், உ.பி., ஜார்கண்ட், ஒடிசா போன்ற இடங்களில் நீடித்த, தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். முக்கிய பிரச்சனைகளில் ஒன்றான பணி நிரந்தம் நீதிமன்றம், வழக்குகள் போன்றவற்றால் பல இடங்களில் சாத்தியமாகியுள்ளது. ஆனால், கர்நாடகாவில் நமது அனுபவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தொழிலாளரின் தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் அவ்வப்போது நடந்த தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கையின் மூலம் அந்த வெற்றியைப் பெற்றோம். இப்போது கர்நாடக மாநில அரசாங்கத்தால் அனைத்து தூய்மைப் பணியாளர்களும் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். ஏஐசிசிடியு அதில் தலைமைப் பங்காற்றியது.

திட்டப் பணியாளர்களின் வேலை என்பது காலாகாலத்திற்குமானது என்றபோதும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமலும் அரசாங்க ஊழியர்கள் என்கிற அந்தஸ்து வழங்கப்படாமலும்தான் இருக்கிறார்கள். குறைந்த பட்சக் கூலியும் வாழ்க்கைக்கான ஊதியமும் சமூகப் பாதுகாப்பு பலன்களும் அவர்களுக்கு இல்லை. கொந்தளிக்கும் திட்டப்பணியாளர்களின் கோரிக்கைகள், உரிமைகள், பலன்களுக்காக நாம் போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும்.

கட்டுமானத் தொழிலாளர் இயக்கத்தை ஒரு வர்க்கப் போராட்ட இயக்கமாக்குவதை நோக்கி மறுசீரமைப்பு செய்தல் வேண்டும். அது கட்டுமானத் துறை இயக்கத்தின் முகத்தை மாற்றுவதற்கான துவக்கமாகும். "முதலில் சங்கம், அடுத்துதான் வாரியம்" என்பதுதான் நமது முழக்கம். கட்டுமானத் தொழிலாளர்கள் இப்பிரச்சனை தொடர்பாக சில காலம் முன்பு நாம் கொண்டு வந்த வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளோம்.

சமீபத்தில் இரயில்வேயில் நடந்த தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான தேர்தலில் ஐஆர்இஎப் (இந்திய ரயில்வே தொழிலாளர் கூட்டமைப்பு) மூன்றாவது முக்கிய கூட்டமைப்பாக வந்துள்ளது. ஐஆர்இஎப் முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது என்பதும் பிஎம்எஸ்-வுடன் இணைந்த பிஆர்எம்எஸ் ஒரு இடத்தில் கூட அங்கீகாரம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றிகளும், அனைத்தும் தழுவிய செயல்பாடுகளும் இரயில்வேயில் ஐஆர்இஎப் ஒரு மாற்றாக, போராடக்கூடிய இடதுசாரி கூட்டமைப்பாக கண்டிப்பாக வளரும் என்பதைக் காட்டுகிறது.

தேயிலைத் தொழிலாளர், சுகாதாரப் பணியாளர்கள், துறைமுகத் தொழிலாளர், பொதுத் துறைத் தொழிலாளர் மத்தியில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். அதேபோல், ராஜஸ்தான், உத்ராகண்ட், சத்திஸ்கர், ஆந்திரா போன்ற மாநிலங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறோம். சிறிய இடையூறுகளுக்குப் பின்னர் தமிழ்நாட்டு வேலை வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாக சென்று கொண்டுள்ளது. தமிழ்நாடு ஏஐசிசிடியு வரை படத்தில் மீண்டும் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. அனுபவம் மிக்க செயல்வீரர்கள் மற்றும் தலைவர்கள் குழுவைக் கொண்டதாக தெலுங்கானா வளர்ந்து வரும் மாநிலங்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளது. ஒடிசாவிலும் பலமாக வளர்ந்து வருகிறோம். அசாமில் நமது வேலையைப் புதுப்பிக்கத் துவங்கியுள்ளோம். பீகார், மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மேற்கு வங்கத்தில் ஒரு நிலையான வளர்ச்சி உள்ளது.

இன்றைய தொழிலாளர் வர்க்கத்தின் முன்னுள்ள சவால்கள் என்ற பெயரில் 2019 ஆகஸ்ட் 31-செப்.1 தேதிகளில் ஏஐசிசிடியு அகில இந்திய பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. ஒரு புதிய பார்வையை, சட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி, தொழிலாளர் சக்தியில் ஏற்படும் மாற்றங்கள், தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் படுத்துதல் பற்றி அதில் விவாதிக்கப்பட்டது.

மோடி அரசாங்கத்தின் அதிகரித்துவரும் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு நம்முடைய அமைப்பு வலுப்பட வேண்டும். பெருமளவில் தொழிலாளரை திரட்டக் கூடிய, துடிப்பான, இயங்காற்றல்மிக்க மாவட்டக் கமிட்டிகளை

**தொடர்ச்சி 15ம் பக்கத்தில்..**



# அம்பேத்கர் புத்தகமும் பெரியார் தடியும்

# சமூகநீதி ஆயுதங்கள்

பாலசுந்தரம்

தேர்தல் போர் தீவிரமடைந்து வருகிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதி தருவோம் என்று ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவமாய் பேச, “10000 கோடி கொடுத்தாலும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளமாட்டோம்” என்று சரியாகவே பதிலடி கொடுத்த முதலமைச்சர் மொழிப்போருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். புதிய கல்விக் கொள்கையை மாநிலக் கல்விக் கொள்கையால் தடுத்துநிறுத்த முன்வருவார் என எதிர்பார்ப்பு எகிறியுள்ளது.

அரசு ஊழியர், ஆசிரியர்களது 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், “ஸ்டாலினுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத்தரத் தயங்கமாட்டோம்” என ஜாக்டோ-ஜியோ போர்ப்பிரகடனம் செய்ய, தமிழ்நாட்டின் மக்களவைத் தொகுதிகளைக் குறைக்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்கிறார் முதலமைச்சர்.

ஆன்மீக-அரசியல் பயணமாக கோவை வந்திருந்த அமித்ஷா, “தமிழ்நாட்டுக்கு ஒரு தொகுதிகூட குறையாது” என்று சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார். “தமிழ்நாடு அரசு தேசவிரோத அரசு” என்று பிரிட்டிஷ் விசுவாசி சவர்க்காரின் சீடர் அமித்ஷா பேசிச் சென்றிருக்கிறார். மகாராஷ்டரா, அரியானா போல தமிழ்நாட்டிலும் வெற்றிபெறுவோம் என்று சொன்னவர் புதிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு பற்றி பேசாமல் தவிர்த்து விட்டார்.

ஆன்மீக சத்குரு ஜக்கி வாசுதேவ் நேரடியாகவே அரசியலில் இறங்கிவிட்டார். ’அரசமைப்பு பிரிவு 370 அய் நீக்கி, காஷ்மீரை இந்தியாவோடு ஒன்றுபடுத்தியவர் என்று கூறி அமித்ஷாவை சர்தார் பட்டேலாக்கி விட்டார். ஜக்கி, அண்ணாமலைக்கு சரியான போட்டி!

மொழியும் கல்வியும் தமிழ்நாட்டின் சமூகநீதி, மாநில சுயாட்சி வரலாற்றோடு இரண்டறக் கலந்தது. திமுகவின் 2021 தேர்தல் அறிக்கையைக் கொண்டும் இதை புரிந்து கொள்ளலாம்.

தேர்தல் அறிக்கையில், ஸ்டாலின்முன்னுரையிலிருந்து இறுதிப்பக்கமான 73ம் பக்கம் வரை ’சமூகநீதி’ மூச்சுக்காற்று போல் இழைவதைக் காணலாம்.

**திமுகவின் சமூகநீதி வாக்குறுதிகள்**

தேர்தல் அறிக்கை, மகளிர் நலனுக்கு 22 வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறது. பிற்பட்ட சமூகத்திற்கு 10, ஆதிதிராவிடர், பழங்குடிக்கு 6, தூய்மைப்பணியாளர்களுக்கு 5, சிறுபான்மை மக்களுக்கு 4 என அறிவிகப்பட்டுள்ளன. இதுதவிர மாற்றுத்திறனாளிகள் (8), திருநங்கையர் (2), முதியோர் நலன் (4) எனவும் வாக்குறுதிகள் தரப்பட்டுள்ளன. இதன்கூடவே, 10 ஆண்டுகால தொலைநோக்கு சமூகநீதி வாக்குறுதிகளும் உள்ளன. அவற்றுள் முக்கியமானது, மகளிருக்கு உரிமைத்தொகை மாதம் ஆயிரம், பட்டியல், பழங்குடி, இதர பிற்பட்ட மாணவருக்கு உதவித் தொகை இருமடங்கு, மனிதக்கழிவை மனிதரே அகற்றும் அவலத்தை முற்றாக ஒழிப்பது போன்றவை. இவ்வாறு திமுகவின் தேர்தல் அறிக்கை, தமிழ்நாடு பற்றிய முற்போக்கான சமூக, அரசியல் அறிக்கையென எவரும் கருதமுடியும்.

**வாக்குறுதிகளின் முன்னேற்ற அறிக்கை?**

501 வது வாக்குறுதியான விடியல் பயணம் முதலாவதாக நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகளின் வலுவான அழுத்தங்களுக்குப் பிறகே, தாமதமாக, மாதம் 1000 மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பள்ளிகளில் காலை உணவுத்திட்டம் மிகவும் நல்ல திட்டம். இதை மேல்நிலைப்பள்ளி வரை நீட்டிக்க வேண்டிய தேவை இருக்கிறது. கல்லூரி செல்லும் மாணவியருக்கு மாதம் 1000 மும் ஒரு முன்மாதிரி திட்டமே.

“சமூகநீதியின் தாயகம்” என்று தமிழ்நாடு போற்றப்படுகிறது. தேர்தல் அறிக்கையின், 453 வது வாக்குறுதி, ’திராவிட இயக்க தீரர்கள் கோட்டம்’ பற்றி பேசுகிறது. “சாதி, மத பேதங்கள் அற்ற உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் ஏற்றத்தாழ்வுகள்

இல்லாத சமத்துவமும் சமதர்மமும் மலர்ந்து மணம் வீசிடும் எழுச்சி பெற்ற மாநிலமாக திகழ்வதற்கு...... அடித்தளமான திராவிடப் பேரியக்கத்திற்கு வேரூன்றி,...அரும்பெரும் உழைப்பெனும் நீரூற்றி ஆலமரமாய் இன்று வளர்ந்து நிற்பதற்கு காரணமான" 'திராவிட இயக்க தீரர்களுக்கு' தலைநகர் சென்னையில் கோட்டம் அமைக்கப்படும் என்று கூறுகிறது. வரும் தலைமுறைகள் திராவிட இயக்க வரலாறு தெரிந்து கொள்வதற்கு இது அவசியம்தான். ஆனால், சாதி பேதங்கள் இல்லாத, உயர்ந்தோர், தாழ்ந்தோர் இல்லாத, "சமத்துவமும் சமதர்மமும் மலர்ந்து மணம் வீசும்" தமிழ்நாடு எனக் கூறுவது சரிதானா?

**சில கேள்விகள்**

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கென்று அமைக்கப்பட்ட திட்டங்கள் செயலாக்க அமைச்சகம் இதுவரை எத்தனை முன்னேற்ற அறிக்கைகளை சட்டமன்றத்தில் வைத்திருக்கிறது? "மாதத்தின் முதல் பணிநாளில்" ஊடகங்களை சந்தித்து முன்னேற்ற அறிக்கை தரப்படும் என்ற வாக்குறுதிப்படி இதுவரை எத்தனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன? திரு சுப. வீரபாண்டியன் தலைமையில், சமூகநீதி கண்காணிப்புக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தக்குழு சமூகநீதி செயலாக்கம் பற்றி கண்காணிக்கும் என்றும் கூறப்பட்டது. அந்தக் குழு இதுவரை அளித்துள்ள அறிக்கைகள் எத்தனை? வேங்கைவயல் சென்று வந்த இந்தக் குழுவின் அறிக்கை எப்போது வெளியிடப்படும்?

பெரியார் பிறந்தநாளை சமூகநீதி நாளாகவும் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாகவும் அறிவித்திருப்பது எந்த அரசும் செய்யாத சிறப்பான செயல். அம்பேத்கரும் பெரியாரும் சொல்கிற சமூக நீதியும் சமத்துவமும் அனைத்துவிதமான சமூக அநீதிகளுக்கும் எதிராக, ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக பிறந்தவை. நீதிக்கட்சி ஆட்சியும் அமைத்தது. திராவிட ஆட்சிகளின் சாதனை 'வளர்ச்சிக்குப் பிறகும் பொருளாதார, சமூக, அரசியல் ஏற்றத்தாழ்வை ஒழியவில்லை ஏன்? புதிய பொருளாதார கொள்கைகள் செயல்படுத்தப் பட்டதற்கு பிறகு இந்த ஏற்றத்தாழ்வுகள் இன்னும் தீவிரமடைந்துள்ளது எதனால்?

பெண்கள், கல்வியில் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளோம் உண்மைதான். தமிழ்நாட்டில் பெண்கள் சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதும் சமூகநீதி பயணத்தில் சாதனைதான். பெண்கள் சொத்துரிமை பெற்றுவிட்டார்களா? ஒட்ட ஒட்ட உறிஞ்சப்படும் பாக்ஸ்கான் பெண் தொழிலாளர் வெடித்துச் சிதறினார்கள் ஏன்? கடந்த ஒரு ஆண்டில் மட்டும் பெண்கள் மீதான் வன்கொடுமைகள் 52% அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் சொல்கின்றன. உழைப்புச் சந்தையில் தலித்துகள் ஒடுக்கப்பட்டவர்கள் பெருமளவில் காலெடுத்து வைத்துள்ளார்கள். ஆனால், அரசியலில், பொருளாதாரத்தில், சமூக மேம்பாட்டில், 'திராவிட' ஆலமரத்தில் தலித்துகள் உட்காரமுடிவதில்லையே ஏன்? கிராமப்புரத்துக்கும் நகர்ப்புரத்துக்கும் இடையே கடும் ஏற்றத்தாழ்வுகள். கிராமப்புரத்துக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள். ஊர்-சேரி? நகர்ப்புரத்துக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள். தென்சென்னை, வடசென்னை? 5,300 ஆண்டுகளுக்கு முன்பே, உலகிற்கு இரும்பை அறிமுகப்படுத்தியது தமிழர் நாகரிகம் என்று தமிழர் பெருமை பேசினார் முதலமைச்சர். நமது தென் தமிழ்நாட்டில் தலித்துகளை வெட்டிச் சாய்க்க இரும்பு அரிவாள்களோடு அலைகிறார்களே இது சிறுமை இல்லையா? வேங்கைவயல் தலித்துகள், அவர்கள் மலத்தை அவர்களே குடிநீர் தொட்டியில் கரைத்து அவர்களே குடித்துக் கொண்டார்கள் என்று தலித்துகளையே குற்றம் சாட்டுகிறது தமிழ்நாடு காவல்துறை. அரசு அமைதிகாப்பது ஏன்?

தேர்தல் வாக்குறுதி எண் 285, மாநிலம் முழுவதுமுள்ள தூய்மைப்பணியாளரது பணி, ஊதியம், ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தது. ஆட்சியாளர்கள் ஆதரவுடன் செயல்படும் தனியார் ஒப்பந்த முதலாளிகளின் இரும்புப்பிடியில் தூய்மைப் பணியாளர்கள் கொடூரமாக கசக்கிப் பிழியப்படுகின்றனர். எஅய்சிசிடியு உள்ளிட்ட இடதுசாரி தொழிற்சங்கங்கள் அவர்களுக்கு நீதிகேட்டு போராடிக் கொண்டிருக்கின்றன. மனிதக் கழிவை மனிதரே அகற்றும் அவலம் ஒழிக்கப்படும் என்றது ஸ்டாலின் அவர்களின் 10 ஆண்டு தொலைநோக்கு வாக்குறுதி. இந்த 4 ஆண்டுகளில் என்ன முன்னேற்றம்? தூய்மைப்பணியாளர்கள் சிலரை செப்டிக் டேங்க் இயந்திர உரிமையாளர்களாக ஆக்குவதுதான் 'அந்த' ஒழிப்பா?

**அம்பேத்கர் புத்தகமும் பெரியாரின் தடியும்!**

இதுவரை பெற்ற பரிசுகளிலேயே மிகவும் மதிக்கும் பரிசு பெரியாரின் 'கைத்தடி'தான் என முதல்வர் பரவசத்துடன் பேசியிருந்தார். அம்பேத்கர் மீது பெரியாருக்கு இருந்த அளப்பரிய மதிப்பையும் அந்த உரையில் சுட்டிக் காட்டியிருந்தார். அம்பேத்கர் (அநீதி, ஏற்றத்தாழ்வுகள் எப்படி வந்தது என) படிக்கச் சொன்னார்; பெரியார் (அநீதி, ஏற்றத்தாழ்வுகள் மீது) அடிக்கச் சொன்னார். அம்பேத்கரது புத்தகமும் பெரியாரது தடியும் சமூகநீதிப் போருக்கான ஆயுதங்கள். போர் தொடர்கிறது.

சமூகநீதி, கூட்டாட்சிமுறை, பன்மைத் தன்மை இவற்றுக்கு பாசிச பாஜக ஆகப்பெரிய முதல் எதிரி. மொழிஉரிமை, மாநில உரிமை, சமூகநீதி மாண்புகளை காக்க பாசிசத்திற்கு எதிராக,

சனாதனத்துக்கு எதிராக போர்நடத்தியாக வேண்டும். அந்த வகையில் முதலமைச்சர் மொழி உரிமை, மாநில உரிமை பதாகயை பாஜகவுக்கு எதிராக உயர்த்தியுள்ளது வரவேற்கத்தக்கது.

‘திமுகவும் பாஜகவும் சின்னப்பசங்க விளையாட்டு விளையாடுவதாக’ தவெக தலைவர் விஜய் சொல்வது முட்டாளாக்க எண்ணும் அரசியல்.

பாசிசத்துக்கு எதிரான போரில், களத்தில் வலுவான கூட்டணி மிகமிக அவசியம். அந்தப்போரில், முன்னணி போர்வீரர்களாக நெஞ்சுயர்த்துபவர்கள் பெண்கள், தலித்துகள், ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, விளிம்புநிலை மக்கள். இவர்களை சமூகநீதி பெற்றவர்களாக அதிகாரப்படுத்துவதுதான், பாஜக கூட்டத்துக்கு மரணத் தோல்வியை கொடுக்கும்.

**சந்திர மோகன்**

# மும்மொழிக் கொள்கை : இந்தி திணிப்புக்கான பாஜகவின் மற்றொரு நிகழ்ச்சிநிரலே !




“தமிழ்நாடு அரசாங்கம் பள்ளிக் கல்விக்கான நிதியை பெற, ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையை கட்டாயம் அமல்படுத்த வேண்டும்” என்ற நிபந்தனை விதிப்பதன் வழியாக, மும்மொழி திட்டம் என்ற பெயரால், தமிழக மக்கள் மீது, இந்தி மொழியை திணிக்க ஒன்றிய பாஜக கூட்டணி அரசாங்கம் முயற்சி செய்கிறது.

‘மும்மொழிக் கொள்கையே இந்திய கல்வித் திட்டத்தின் முதுகெலும்பு; அதனால், மாநிலங்கள் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும்; அதன்படி பிஎம்ஸ்ரீ பள்ளிகளைத் திறக்க வேண்டும்; இல்லையெனில் தமிழக கல்வித் துறைக்கு சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய ரூ.2152 கோடியை வழங்க முடியாது’ என்று ஆணவத்தோடு கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார். மும்மொழிக் கொள்கை என்பது இந்தித் திணிப்பு. பிஎம் ஸ்ரீ பள்ளிகள் மதவெறுப்புப் பரப்புரை மையம்.

### இந்தி திணிப்புக்கு எதிர்ப்பும் ஆதரவும்

ஒன்றிய கல்வி அமைச்சரின் அறிக்கையை கண்டித்து, இந்தி மொழித் திணிப்புக்கு எதிராக திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் கண்டன போராட்டம் நடத்தின; ரெயில் நிலையங்களில் உள்ள ஊர்ப் பெயர் பலகைகளில் இந்தி எழுத்துக்களை அழிப்பது, தபால் நிலையங்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என மாணவர் அமைப்புகள், பல்வேறு அமைப்புகள் போராட்டங்கள் நடத்தி வருகின்றன.

‘இந்தியை திணிக்கும் மும்மொழிக் கொள்கை தேவையில்லை’ என தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மாறாக, பாஜக மட்டும் இந்திக்கு ஆதரவாக குரல் எழுப்பி வருகின்றது. மும்மொழி திட்டத்துக்கு ஆதரவாக, ‘ஒரு கோடி பேரிடம் தமிழ்நாடு பாஜக 90 நாட்கள் கையெழுத்து இயக்கம் நடத்தும்’ என பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்திருக்கிறார். ஒன்றிய அமைச்சர் முருகன் உள்ளிட்ட பல்வேறு பாஜக தலைவர்களும், மும்மொழிக் கொள்கை என்றால், 1)தாய்மொழி தமிழ், 2)ஆங்கிலம், 3) இந்தி என்ற விளக்கமும், ‘தமிழ்நாட்டில் உள்ள சிபிஎஸ்இ பாடத்திட்டப் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை - இந்தி உள்ளது ; எனவே, தமிழ்நாடு மாநில பாடத்திட்டப் பள்ளிகளிலும் மும்மொழிக் கொள்கை கொண்டு வரப்பட வேண்டும்... இந்தி படித்தால் தான், நாடுமுழுவதும் வேலைகளுக்கு செல்ல முடியும்’ என்ற அறிவுரையும் வழங்கி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் இந்தி கற்பிக்கும் தனியார் பள்ளிகளில் கூட, பத்தாண்டு காலம் இந்தியை விருப்ப பாடமாக படிக்க நிர்பந்திக்கப்பட்ட பெரும்பான்மையான தமிழக மாணவர்களுக்கு இந்தியை பேசவோ, எழுதவோ கூட தெரிவதில்லை என்பது தான் உண்மை நிலவரமாகும்.

### வேலை வாய்ப்புக்கும் இந்திக்கும் தொடர்பு இல்லை!

பாஜக தலைவர்கள் உள்ளிட்ட பலரும் ‘இந்தி படித்தால் வேலை வாய்ப்புகள் அதிகம்’ எனத் தொடர்ந்து பொய் பேசி வருகின்றனர். தற்போது தமிழ்நாட்டில் உள்ள சிபிஎஸ்இ தனியார் பள்ளிகளில் மும்மொழி திட்டம் கீழ், இந்தியை

கற்ற மாணவர்களுக்கு இந்தியாவில், எங்குமே மத்திய அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கிடையாது. இதற்கு நேர்மாறாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களான தபால் அலுவலகங்கள், ரயில்வே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், என்.எல்.சி, பெல் போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்களில், தமிழ்தெரியாத ஆனால், இந்தி தெரிந்தவர்கள் வலிந்து திணிக்கப்படுகின்றனர்; ஏராளமான வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

**இணைப்பு மொழி எனும் பெயரால் இந்தி திணிப்பு**

'இந்தி தான் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்' என, பாஜக அரசாங்கம் பல்லாண்டுகளாக இந்தியை திணிக்கும் நடவடிக்கைகளின் தொடர்ச்சிதான் தற்போதைய மும்மொழிக் கொள்கை விவாதம் ஆகும்.

சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தியைத் திணிக்கும் நிகழ்ச்சிநிரல், 2014 ஆண்டில் மோடி ஆட்சியில் திட்டவட்டமாகத் துவங்கி விட்டது.

நாட்டின் 'ஒற்றுமைக்கு' இந்தி அவசியம் என்றும், அதனால் இந்தி பேசாத மாநிலங்களில் இணைப்பு மொழியாக இருக்கும் ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியை இணைப்பு மொழியாக்க வேண்டுமென்றும், பல்லாண்டுகளாகவே உள்துறை அமைச்சர் அமித் ஷா துவங்கி பல்வேறு பாஜக அமைச்சர்கள், தலைவர்கள் வலியுறுத்திப் பேசிவருகின்றனர்.

'இந்தி தான் இந்தியாவின் தேசியமொழி' என்று பொருள்படுத்தும் வகையில், ஒன்றிய அமைச்சகங்கள், துறைகள், கார்ப்பரேஷன்கள், வங்கிகள், ரெயில்வே மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் இந்தியை பயன்படுத்துவது படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்தியில் மட்டுமே பேசுமாறு பாஜக தலைவர்களுக்கு அறிவுறுத்துவது, ஐநா சபையில் இந்திக்கு அதிகாரபூர்வ தகுதி பெற முயற்சிப்பது, தென் மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலை மைல்கற்களில் ஆங்கிலத்தை அகற்றி இந்தியை கொண்டுவர முயற்சிப்பது எனப் பல்வேறு நடவடிக்கைள் தொடர்கின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணை, 22 மொழிகளை தேசிய மொழிகளாக அங்கீகரித்திருக்கிறது; அதேவேளை இந்தியும் ஆங்கிலமும் அதிகாரபூர்வ மொழி என்ற சமதகுதி கொண்டவை என்பதாகவும் அறிவித்துள்ளது. ஆனால், இதற்கு நேர்மாறாக, நடைமுறையில் இந்தி மட்டுமே அதிகாரபூர்வ தகவல் தொடர்பு மொழியாக்க முயற்சிப்பது அரசமைப்பு சட்டத்துக்கு எதிரானதாகும்.

தங்களுக்கு தெரிந்த தாய் மொழியில் அனைத்து ஆவணங்களையும் பெறுவது இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையாகும். ஆனால், நடைமுறையில், ஒன்றிய அரசாங்கம் ஆவணங்கள், சட்டங்கள், படிவங்கள் போன்ற பலவற்றையும் இந்தியிலும், ஆங்கிலத்திலும் தான் உருவாக்குகிறது.

**ஏன் இந்தி திணிப்பை எதிர்க்க வேண்டும்?**

இணைப்பு மொழியாக நுழைந்த இந்தி, வட மாநிலங்களின் தாய்மொழிகளை களவாடி உள்ளது. இந்திபேசும் பகுதிகள் என்று சொல்லப்படும் பகுதிகளில் பொதுவாக பேசப்படும் தாய்மொழி இந்தி அல்ல. மாறாக அது ஒரு வகையான இணைப்பு மொழியாக, அதாவது, சமஸ்கிருஸ்தமயமாக்கப்பட்ட இந்தி வடிவமாக, அலுவல்மொழியாக அங்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தென்னிந்திய மாநிலங்கள், அசாம், மேற்கு வங்கம், வடகிழக்கு மாநிலங்களில் எப்படி ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறதோ அதுபோல் தான், இந்திபேசும் பகுதிகள் என்று சொல்லப்படும் மாநிலங்களிலும், இந்தி என அழைக்கப்படுவது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உதாரணமாக இந்தி பேசும் மாநிலங்கள் என அறியப்படும், வெவ்வேறு தாய்மொழிகளைக் கொண்ட மாநிலங்களில் முதன்மை மொழியாக இந்தியும், இரண்டாம் மொழியாக ஆங்கிலமும், மூன்றாம் மொழியாக பொதுவாக சம்ஸ்கிருதமும் உள்ளன. பின்வரும் மாநிலங்களில் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழிகளின் பட்டியல் பின்வருமாறு :-

- **உபி - உருது, ஆவதி, போஜ்பூரி**
- **உத்தரகாண்ட் - கார்வாலி, கொமாஹனி**
- **பீகார் - போஜ்பூரி, மைதிலி, மஹவி**
- **ஜார்க்கண்ட் - சந்தாலி, முண்டாரி**
- **மபி - மால்வி, நிமதி, புந்தேலி, பெகெலி**
- **சத்தீஷ்கர் - சத்திஷ்கரி**
- **ராஜஸ்தான் - ராஜஸ்தானி**
- **ஹரியானா - ஹர்யான்வி**
- **ஹிமாச்சல் - பஹாரி, காங்க்ரி, டோங்க்ரி**

பிரபல வரலாற்றாசிரியர் அலோக் ராய், "இந்தி பேசும் பகுதிகளில் உள்ள மாணவர்கள் இந்தித் தேர்வில்பெரும்எண்ணிக்கையில்தோல்வியடைவது என்பது அங்குள்ள மாணவர்களின் தாய்மொழியை இந்தி களவாடிவிட்டது என்பதற்கான வலுவான சாட்சியமாகும் ... வட இந்திய மாநிலங்களில் கூட இந்தி ஒருவிதமான ஏழைகளின் ஆங்கிலமாக - அதாவது அதிகாரம், மேல்நோக்கிய நகர்வு ஆகியவற்றின் மொழியாகவே கருதப்படுகிறது" என கூறியிருப்பது உண்மை நிலையை உணர்த்துகிறது.

சுமார் ஒரு நூற்றாண்டு காலத்தில் இணைப்பு மொழியாக நுழைந்த இந்தியானது, போஜ்பூரி, ஆவதி, மைதிலி, போன்றப் பல்வேறு வட இந்திய

தொன்மை மொழிகளை வெளியேற்றி அவைகளின் இடத்தில் அமர்ந்து கொண்டது மட்டுமல்லாமல், அந்த மொழிகள் எல்லாம், இந்தியின் வட்டார வழக்குகள் எனச் சொல்லப்படும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

**இந்தியை திணிப்பது ஒற்றுமையை உருவாக்காதே**

இந்தியா முழுவதுமுள்ள எதிர்கட்சிகளும், எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களும் திட்டவட்டமாக இந்தித் திணிப்பை எதிர்த்து வருகிறபோதிலும், பாஜக அரசாங்கம் தொடர்ந்து பல்வேறு வழிமுறைகளில் இந்தியை திணிக்க முயற்சி செய்து வருகிறது.

இந்தி மேலாதிக்கம், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம், தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், அசாம், மற்ற வடகிழக்கு மாநிலங்களுடையது மட்டுமல்ல, போஜ்புரி, மைதிலி, மகாஹி, அவாதி உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களிலுள்ள இன்னும் பிற மொழி பேசுகிறவர்களுக்கும் உரியது என்பதும் முக்கியமானது.

சோவியத் ஒன்றியம் முழுவதும் ருஷ்ய மொழியை கட்டாயமாக்குவது என்ற விவாதம் எழுந்தபோது, லெனின் பின்வருமாறு கூறினார் :- "குண்டாந்தடி கொண்டு மக்களை சொர்க்கத்திற்குள் விரட்டுவதை நாம் விரும்புவதில்லை; "கலாசாரம்" பற்றி நேர்த்தியான சொற்கள் சொல்லப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, கட்டாய அதிகாரபூர்வ மொழியென்பது குண்டாந் தடியை பயன்படுத்துகிற பலவந்தமாகும்."

**இந்தி– இந்து –இந்தியா**

'இந்தி- இந்து -இந்தியா ' -என்பது, ஆர்எஸ்எஸ் அமைப்பின் மனுதர்ம சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிநிரல் ஆகும். பாஜக அரசாங்கம், இந்தியத்தன்மை என்பதை, ஒரே மொழி என்பதில் மட்டுமல்லாமல், உணவு, இறைநம்பிக்கை, அரசியல், கருத்தியல் விசயங்களில் கூட ஒரேபடித்தன்மையை திணிக்க விரும்புகிறது.

இந்தியாவின் பன் மொழி, கலாசாரங்கள், உணவு, நம்பிக்கைகள், கருத்தியல்களைப் பாதுகாக்க, பாஜக வின் பாசிச திட்டமான 'ஒரு தேசம், ஒரு மொழி, ஒரு நம்பிக்கை,' என்பதை எதிர்த்துப் போராடியாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனது தாய் மொழியில் பள்ளிக்கல்வி பெறுகிற உரிமையை நாம் அறுதியிட வேண்டும். அனைத்து வகையான இந்தி திணிப்பு நடவடிக்கைகளையும் முறியடிக்க வேண்டும்!

10ம் பக்க தொடர்ச்சி..

உருவாக்க வேண்டும். முடிவெடுக்கும் அமைப்பு மட்டங்களில் பெண்களும் இளைஞர்களும் பங்குபெற வேண்டும். அனுபவமிக்க மூத்த தோழர்கள் இளைஞர்களுக்கு உதவ வேண்டும். இளைய தலைமுறை நிபுணத்துவம் பெற சீனியர் தோழர்கள் உதவ வேண்டும். அவர்களுக்கு நடைமுறைப் பயிற்சி தேவைப்படுகிறது. முடிவு எதுக்கும் அமைப்புகளில் பெண் தோழர்கள் eண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இந்த வழியில் மட்டுமே மதவெறி, கார்ப்பரேட், மனுவாத, பாசிச மோடி அரசாங்கத்திற்கெதிரான போராட்டத்தைக் கூர்மைப்படுத்த முடியும்.

டிஜிட்டல் வேலை நிறுத்தம் உள்ளிட்ட புதிய வடிவிலான போராட்டங்கள் எழுந்து வந்து கொண்டிருக்கின்றன. மேலை நாடுகளில் தொழிலாளர்கள் புகார் அளிக்க, குறைகளைத் தீர்த்து வைக்க "ஆப் (செயலி)"களை தொழிற்சங்கங்கள் உருவாக்கியுள்ளன. அடுத்த பத்து ஆண்டுகளில், 30 சதவீதத் தொழிலாளர்கள் இடத்தை செயற்கை நுண்ணறிவும் ரோபோக்களும் பிடித்துக் கொள்ளும் என சொல்லப்படுகிறது. ஆனாலும், போர்க்குணமிக்க, தீவிரமான தொழிலாளர் இயக்கத்தைத் தவிர வேறு மாற்று இல்லை. மோடி அரசின் தாக்குதலுக்கு எதிரான ஒரு போர்க்குணமிக்க, புரட்சிகர தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அதன் மூலம்தான், தொழிலாளர் வர்க்கம் எதிர்த் தாக்குதல் நடத்திட முடியும். ஒரு போர்க்குணமிக்க, புரட்சிகர தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் மோடி தலைமையிலான பாஜக அரசைத் தூக்கியெறிந்திட தொழிலாளர்களும் ஏஐசிசிடியுவும் உறுதியேற்போம்.

இவ்வாண்டு அரசமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு, இந்தியக் குடியரசின் 75வது ஆண்டும் ஆகும். இந்திய ஜனநாயகத்திற்கும் மதச்சார்பின்மைக்கும் அடிப்படையான அரசமைப்புச் சட்டத்தை அழிக்கவும் அதன் இடத்தில் மனு (அ)நீதியைக் கொண்டுவரவும் முயற்சி நடக்கிறது. இது இந்திய மக்களின் மதிப்புமிக்க மதச்சார்பின்மை, சோசலிசம், ஜனநாயகத்திற்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள முழுமையான போர் ஆகும். இது நவீன இந்தியாவின் அடிப்படைகளுக்கு எதிரானது.

இந்தப் பின்னணியில், அரசமைப்புச் சட்டத்தை, ஜனநாயகத்தைப் பாதுகாக்க, மதச்சார்பின்மை, சோசலிச, ஜனநாயக மற்றும் ஒரு இறையாளுமை கொண்ட அரசமைப்புச் சட்டத்தையும் குடியரசையும் நிறுவுவதற்காக போராட நாம் உறுதி ஏற்க வேண்டும். அந்த லட்சியத்திற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த தொழிலாளர் வர்க்கத்தின் தியாகத்தை உயர்த்திப் பிடித்திட வேண்டும்.

**புரட்சி ஓங்குக!**




# நடுநிலையான, சுதந்திரமான தேர்தல் ஆணையம் இன்றி சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் இருக்க முடியாது

தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை நியமிப்பது குறித்த ஒரு சந்தேகத்திற்கிடமான சட்டத்தை மோடி அரசாங்கம் 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றியிருந்தது. அந்த சட்டத்தை கேள்விக்குட்படுத்திய மனுவை பிப்ரவரி 19 அன்று விசாரிக்க உச்ச நீதிமன்றம் திட்டமிட்டிருந்தது. அதற்கு ஒரு நாள் முன்னதாக பிப்ரவரி 18 அன்று மோடி அரசாங்கம் அதே சட்டத்தை பயன்படுத்தி, பதவியில் இருந்து வெளியேறும் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமாருக்கு பதிலாக ஒருவரையும், தேர்தல் ஆணையத்தின் மூன்றாவது உறுப்பினர் ஒருவரையும் நியமித்தது. தலைமை தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்கவும், தேர்தல் ஆணையத்தின் பிற ஆணையர்களை நியமிக்கவும் பிரதம மந்திரியால் தலைமை தாங்கப்படும் மூன்று உறுப்பினர் குழுவிற்கு இந்த 2023 சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தியும் இந்த குழுவின் பிற இரு உறுப்பினர்கள் ஆவர். ஆக நடைமுறையில் இந்தக் குழு மோடி, ஷாவின் ஒரு கூட்டுறவாக மாறியுள்ளது. தனது மாற்றுக் கருத்துகளை சொல்வதற்கான வாய்ப்பு மட்டுமே ராகுல் காந்திக்கு உள்ளது.

இந்நிகழ்வில், 2023 சட்டத்தின் செல்லுபடித் தன்மையை கேள்விக்குட்படுத்தும் மனுவின் மீது உச்ச நீதிமன்றம் முடிவெடுக்கும் வரை, தலைமை தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் கூட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக் கொண்ட அவரது நியாயமான மாற்றுக் கருத்தை ராகுல் காந்தி தெரிவித்தார். நகைமுரணாக, இந்த அரசாங்கம் தேர்தல் ஆணையர்களை எவ்வித தயக்கமுமின்றி நியமித்த போது, உச்ச நீதிமன்றமோ இந்த மனு மீதான விசாரணையை ஒரு மாத காலத்திற்கு, மார்ச் 19 வரைக்கும் நிறுத்தி வைத்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மார்ச் 2, 2023 இல், நீதிபதி கே எம் ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு சட்ட அமர்வு, தேர்தல் ஆணையம் ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இல்லாமல், சுதந்திரமாக இருக்க வேண்டியதன் தேவையை அடிக்கோடிட்டு காட்டியது. ஆதலால் பிரதம மந்திரி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், இந்திய தலைமை நீதிபதி ஆகியோர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர் குழுவை அது பரிந்துரைத்தது. ஆனால் இந்த 2023 சட்டம், நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதமுமின்றி, விமர்சன ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் நிறைவேற்றப்பட்டது. அதன்மூலம் அரசமைப்புச் சட்ட அமர்வின் உணர்வையே அது முழுவதுமாக கேலிக்குள்ளாக்கிவிட்டது.

தேர்தல் ஆணையர்களின் நியமனம் குறித்து எவ்வித வெளிப்படையான ஏற்பாட்டையும் அரசமைப்புச் சட்டம் கொண்டிருக்கவில்லை. ஆனால் அரசியல் நிர்ணய சபையில் நிகழ்ந்த விவாதங்கள், தேர்தல் ஆணையம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாமல், முழுமையான சுதந்திரத்துடன் இருக்க வேண்டும் என்பதை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. மோடி அரசாங்கம் முதலில் அரசமைப்புச் சட்டத்தின் இந்த மௌனத்தை பயன்படுத்திக் கொண்டு தேர்தல் ஆணையத்தில் தனக்கு வேண்டியவர்களை நியமனம் செய்தது. பின்னர், இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றம் அரசாங்கத்தை கண்டித்து, அரசாங்கத்தை தடுக்கும் விதத்தில் மூன்று உறுப்பினர் குழுவை பரிந்துரைத்த போது, தேர்தல் ஆணையர்களின் நியமனம்

மீது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை கொண்டுவர அதனை சட்டமாக மாற்றியது. அதன்மூலம் இந்த அரசாங்கம் அரசமைப்புச் சட்ட அமர்வின் தீர்ப்பை திறன்மிக்க விதத்தில் தலைகீழாக மாற்றியமைத்தது. பிப்ரவரி 18 இல் செய்யப்பட்ட நியமனங்களுடன் 2029 தேர்தல்கள் வரைக்கும் அடுத்தடுத்த தலைமை தேர்தல் ஆணையர்கள் தற்போது நமக்கு தயாராக உள்ளனர். ஜனவரி 2029 இல் ஜியானேஷ் குமாரின் ஓய்விற்கு பிறகு, அடுத்த மக்களவை தேர்தல்களை விவேக் ஜோசி மேற்பார்வையிடுவார். ஜியானேஷ் குமாரும் விவேக் ஜோசியும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்தில் அமித் ஷாவின் கீழ் மிகவும் நெருக்கமாக பணியாற்றியுள்ளனர்.

தலைமை தேர்தல் ஆணையராக செயல்பட்ட ராஜீவ் குமாரின் செயல்பாடுகளால், அரசாங்கத்துடன் சமரசமாக நடந்து கொள்ளும் தேர்தல் ஆணையத்தால் விளையும் தீய விளைவுகள் குறித்து ஒட்டுமொத்த நாடும் விழிப்புணர்வு பெற்றது. பாஜகவின் உயர்மட்டத் தலைவர்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகளை அப்பட்டமாக மீறுவதையும், பாஜகவின் நட்சத்திர பரப்புரையாளர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் கட்டவிழ்த்து விடும் கண்மூடித்தனமான வெறுப்பு பரப்புரையையும் தேர்தல் ஆணையம் இன்றைக்கு கண்டுகொள்ளாமல் இருப்பதை மட்டும் செய்வதில்லை. அண்மைய காலங்களில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பது முதல் வாக்குகளை எண்ணுவது வரை தேர்தல்களை நடத்துகிற ஒட்டுமொத்த செயல் முறையிலும் அரங்கேற்றப்படும் மாபெரும் மோசடிகள் பற்றிய செய்திகள் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து வந்த வண்ணமுள்ளன. ராஜீவ் குமாரின் கீழான தேர்தல் ஆணையம் தேர்தல் செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள், முறைகேடுகள் குறித்த தீவிர குற்றச்சாட்டுகளுக்கு ஒருபோதும் பதிலளிக்கவில்லை. அனைத்து புகார்களையும் சிறுமைப்படுத்தி, கேலியான, தரமற்ற ஈரடிகளை செய்தியாளர் சந்திப்பில் கூறி அவற்றை அவர் ஒதுக்கித் தள்ளினார். இந்தியாவில் ஜனநாயகம், குறிப்பாக, கொள்கைகளை வடிவமைப்பதிலும் அவற்றை அமல்படுத்துவதிலும் அல்லது அரசாங்க நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை, பொறுப்புடைமையை உறுதி செய்வதிலும் மக்கள் பங்கேற்பிற்கான உள்ளடக்கத்தை ஒருபோதும் உண்மையில் கொண்டிருக்கவில்லை. மேலும் தற்போது தேர்தல் செயல்முறையும் தனது நம்பகத்தன்மையை இழந்தால் சர்வாதிகாரத்திற்கான முறையான முகமூடியாக, ஜனநாயகம் உண்மையிலேயே மாறிவிடும்.

தேர்தல் ஆணையத்தின் நடுநிலைத் தன்மை, நேர்மை குறித்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை புரிதலின் புனிதத் தன்மையையும், தேர்தல் ஆணையத்தின் மீது தேவையற்ற செல்வாக்கையும் கட்டுப்பாட்டையும் செயல்படுத்துவதில் இருந்து ஆட்சியாளர்களை தடுப்பது குறித்த மார்ச் 2023 அரசமைப்புச் சட்ட அமர்வின் உணர்வையும் உச்சநீதிமன்றம் நிச்சயமாக உயர்த்திப் பிடிக்க வேண்டும். தலைமை தேர்தல் ஆணையர் உள்ளிட்ட தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிப்பது குறித்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அந்த சட்டம் ஜனநாயகக் கோட்பாடுகளை நிச்சயமாக உயர்த்திப் பிடிக்க வேண்டும். தேர்தல் பத்திர திட்டம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனக்கூறி உச்ச நீதிமன்றம் அதனை காலதாமதமாக அகற்றியது. ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் தனது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப தேர்தல் ஆணையத்தை நியமித்துக் கொள்ள வாய்ப்பளிக்கும், கேலிக்குரிய 2023 சட்டத்தை, நீதிமன்ற மறு ஆய்வுக்கு உட்படுத்துகிற தனது அதிகாரத்தை பயன்படுத்தி, அதனை நீக்குவதற்கு உச்ச நீதிமன்றம் நிச்சயமாக தயங்கி நிற்கக்கூடாது. அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் உச்சநீதிமன்றம் தானே. ஆகவே அரசமைப்புச் சட்டத்தையும், ஜனநாயகத்தின் அடிப்படை உணர்வையும் ஆட்சியாளர்கள் கேலி கூத்தாக்க உச்ச நீதிமன்றம் நிச்சயமாக

**தலையங்கம் தொடர்ச்சி**

அப்படியென்றால் எந்த அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படும் என்று சொல்லுங்கள் என்றால், அதற்கு அமித் ஷாவிடம் சரியான பதில் இல்லை. ஒன்றிய அரசின் இந்த தொகுதி மறு சீரமைப்பிற்கு தமிழ் நாட்டிலுள்ள இகக(மாலெ) உட்பட அனைத்து கட்சிகளும் கடும் கண்டனத்தையும் எதிர்ப்பை தெரிவித்துள்ளார்கள். மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையும் போது மாநிலங்களுக்கான அனைத்து பங்குகளும் குறையும். ஏற்கனவே மோடி அரசு மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாயை பெருமளவில் குறைத்திட முயற்சி செய்து வருகிறது. மாநிலங்களின் உரிமைகள் முற்றிலும் பறிக்கப்படும் நிலையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கட்சிகளும் மக்களும் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டிய தருணம் இது. ஆனால், பாஜக, நாம் தமிழர் கட்சி போன்றவை தமிழ்நாடு அரசு நடத்தும் அனைத்து கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றால் இவர்கள் யாரின் நலன்களுக்காக இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. கர்நாடகா மாநிலத்தில், கூடங்குளம் அணுக் கழிவை கோலார் தங்க வயலில் புதைக்கலாம் என்று சொன்னதற்கே, கர்நாடகாவின் பாஜக, காங்கிரஸ் என அனைத்து கட்சிகளும் ஒன்று சேர்ந்து மாநில மக்களின் நலன்களுக்காக நின்றார்கள். ஆனால், அதே பாஜக தமிழ்நாட்டில் மாநில மக்களின் நலனுக்கு எதிராக நிற்கிறது. தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் பாஜகவிற்கு ஒன்றிய மோடி அரசிற்கு தக்க பதிலடி கொடுப்பார்கள் தமிழ்நாட்டு மக்கள்.



# ஏஐகேஎம் தலைமையில் பனமரத்துப்பட்டியில் விவசாயிகள் போராட்டம்

சேலம் மாவட்டத்தில், பனமரத்துப்பட்டி ஒன்றியத்துக்கு உட்பட அத்திப்பட்டி, சூரியூர் கிராமங்களில், சுமார் 1400 ஏக்கர் நிலங்களில் தலைமுறை தலைமுறையாக பயிரிட்டு வந்த பழங்குடியினர், பட்டியல் சாதியினர் மற்றும் பிற மிகவும் பின்தங்கிய சமூகங்களைச் சார்ந்த ஏழை, சிறு குறு விவசாயிகள், ஆதிக்க சக்திகள் சிலரால், போடப்பட்ட பொய்வழக்கின் மீதான உயர்நீதிமன்ற உத்தரவு காரணமாக கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர், 2004 அக். 2 ல் அடக்குமுறைகள் மூலமாக தங்களுடைய நிலங்களில் இருந்து வெளியேற்றப் பட்டனர். அந்த நிலங்கள் அனைத்தும் தற்சமயம் புல், புதர்களாக பாழடைந்து போய் உள்ளன. நிலமிழந்து பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகள் தொடர்ந்து தங்களுடைய நிலங்களை திருப்பி வழங்க வேண்டும் என கோரிக்கைகள் விடுத்து போராடி வருகின்றனர்.

இந்த 1400 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு வனத்துறை தனது நிலம் இல்லை என அறிவித்து விட்டது; அதேபோல, பனமரத்துப்பட்டி ஏரியை 100 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்க, சேலம் மாநகராட்சி சமீபத்தில் தயாரித்து அளித்த திட்ட அறிக்கையிலும், DPR (Detailed Project Report)லும் இந்த நிலங்கள் குறிப்பிடப்படவில்லை. ஏரிக்கு நீர் வழங்கும் நீர்வழிப் பாதையின் எதிர்திசையில் சுமார் 10 கி.மீ தொலைவில் அரசு புறம்போக்காகவே இந்த நிலங்கள் உள்ளன.

எனவே, இதன் மீது பனமரத்துப்பட்டி வருவாய் ஆய்வாளர் அவர்கள், ஒரு கள ஆய்வை மேற்கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்வதை வலியுறுத்தி 24.2.25 அன்று விவசாயிகள், அகில இந்திய விவசாயிகள் மகாசபை, சேலம் மாவட்ட கமிட்டி சார்பில், கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடத்த கடைசி நேரத்தில், காவல்துறை அனுமதி மறுத்தது; உளவுத் துறை கிராமங்களுக்கு சென்று விவசாயிகளிடம் எதிர்பிரச்சாரம் மேற்கொண்டது.

இவற்றை எல்லாம் கடந்து, விவசாயிகள் மகாசபை ஒன்றிய கமிட்டி முன்னணித் தோழர்களின் முயற்சியால், திட்டமிட்டபடி 24.2.25 அன்று காலை 10.30 மணியளவில் சுமார் 300 க்கும் மேற்பட்ட ஏழை விவசாயிகள் பனமரத்துப்பட்டியில் அணிதிரண்டனர். ஏஐகேஎம் மாவட்டத் தலைவர் அன்பு மற்றும் ஏஐகேஎம் மாநில பொதுச்செயலாளர் சந்திரமோகன் ஆகியோர் சம்பந்தப்பட்ட வருவாய் அதிகாரிகளை நேரில் சந்தித்துப் பேசி கோரிக்கைகளை விளக்கினர்; விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை களஆய்வு செய்து, உண்மை தன்மை அறிந்து, அவற்றை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கே திருப்பி வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டனர். வருவாய் ஆய்வாளர், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளிடம் இருந்து தனிதனியாக கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு கள ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.



# பிப்ரவரி 28: தேசிய அறிவியல் நாள்

தோற்றத்தில் சூரியன் பூமியை சுற்றி வருவதுபோல் தெரிகிறது. இது தோற்றம் மட்டுமே. உண்மையில் பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. இதுதான் அறிவியல் உண்மை. தோற்றம் எனும் முக மூடிக்குள் சென்று அதன் சாரத்தைக் கண்டுபிடிப்பதுதான் ஒரு விஞ்ஞானியின் பணி.

**சமூக அறிவியலுக்கும் இது பொருந்தும்.**

சமூகம், வெளித்தோற்றத்தில் மார்க்ஸ்-எங்கல்ஸ் முன்வைத்த "சமூகங்களின் வரலாறு வர்க்கப் போராட்டங்களின் வரலாறு" என்ற கருதுகோளுக்கு மாறாக இருப்பதாகவே, தோன்றுகிறது. ஆனால், தோற்றத்துக்குள் சென்று அதன் சாரமாக இருக்கும் வர்க்கப் போராட்டத்தை கண்டுணர்வதுதான் ஒரு சமூக விஞ்ஞானியின் வேலை.

-தோழர் வினோத் மிஸ்ரா, சென்னையில் நடைபெற்ற கட்சிப் பள்ளியில்- வினோத் மிஸ்ரா படைப்புகளில் இருந்து

**அறிவியல் மனப்பான்மை என்றால் என்ன?**

அறிவியல் மனப்பான்மையையும் மனித நேயத்தையும் வளர்ப்பதும் ஒவ்வொரு குடி மக்களது கடமை என அரசமைப்புச்சட்டம் சொல்கிறது.

அறிவியல் மனப்பான்மை என்கிற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் ஜவகர்லால் நேரு.

மும்பையில் உள்ள நேரு அறிவியல் மய்ய அறிஞர்கள் 1981 ல் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

அறிவியல் மனப்பான்மையே அறிவைப் பெறுவதற்கான சாத்தியமான வழிமுறைகளைத் தருகிறது.

அறிவியல் முறைப்படி பெற்ற அறிவின் மூலமே மனித குலத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

அன்றாட வாழ்வில் மனிதர்களின் ஒவ்வொரு முயற்சிக்கும், பொது வாழ்க்கை நெறிமுறைகள் தொடங்கி அரசியல்- பொருளாதாரம் வரை அனைத்துக்கும் அறிவியல் மனப்பான்மை அடிப்படையிலான அணுகுமுறையே மனிதகுல முன்னேற்றத்துக்கு உதவும்.

சமூகத்தில் அனைவரையும் உள்ளடக்கிய அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க அடிப்படை பண்புதான் 'அறிவியல் மனப்பான்மை'.

*இந்து தமிழ்திசை நாளேட்டில், 28-02-2025*

ஆர்எஸ்எஸ்-பாஜக கூட்டம் ஏன் அறிவியல் மனப்பான்மையை வெறுக்கிறது, மூடத்தனத்தையே அறிவியலாக ஆக்க முனைகிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

# கேள்விக்கென்ன பதில்?




கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு 11 லட்சம் கோடி கொடுத்துள்ளது.

**–கோவையில் எல். முருகன், 22-02-2025**

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு 5 லட்சம் கோடி கொடுத்துள்ளது.

**–கோவையில் அமித்ஷா, 25-02-2025**

மீதம் 6 கோடி எங்கே முருகன்?

**–தமிழ்நாடு மக்கள்**

---

தமிழ்நாட்டில் மாணவர்களுக்கு மொழியை தேர்ந்தெடுக்கும் உரிமை மறுக்கப்படுகிறது.

**–ஆளுநர் ஆர் என் ரவி, திருநெல்வேலியில்**

தமிழ் திணிக்கப்படுகிறது என்று சொல்கிறீர்களா ரவி?

**–தமிழ்நாட்டு மக்கள்**

# திண்ணைச்சில்லுகள்

தமிழக மீனவர்கள் மீதான தொடர் தாக்குதலை ஒன்றிய அரசு தடுத்து நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி ராமேசுவரம் மீனவர்கள் தொடர் பட்டினிப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அங்கு திடீரென்று சென்ற ஆளுநர் ரவி ஒரு மீனவச் சிறுவனை கட்டிப்பிடித்து தனது கரிசனத்தைக் காட்டியிருக்கிறார்.

அடுத்த நாள் சென்னையில் நடந்த தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆளுநர், ஆரியர் என்பது இனம் அல்ல; ஆரிய இனப் பாகுபாட்டை விதைத்தவர் மேக்ஸ் முல்லர். ஆரியர்கள் என்பவர்கள் ஆசிரியர்கள். தலை சிறந்தவர்கள். ஆரியர்களைப் பற்றி முழுமையாகத் தெரியாமல் சிலர்....நச்சு விதையை விதைக்கிறார்கள் என்று பேசியுள்ளார்.

ஆளுநரது உண்மையான கவலை மீனவர்கள் பற்றி அல்ல. ஆரியர்கள் பற்றியது.

ஆரியர்கள் தங்களை சனாதனத்தின் ஆசிரியர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதனால்தான் ஆரியர்களும் சனாதனமும் வேண்டாமென்று சொல்கிறது தமிழ்நாடு.

# வீடு; வீட்டுமனை கோரிப் போராட்டம்





கள்ளக்குறிச்சி மாவட்டம் முழுவதும் வீட்டுமனை, வீடு வறிய மக்களின் மிகப் பெரிய பிரச்சினை. உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள திருநாவலூர் ஒன்றியம் கூட்டடி கிராமத்தில் வறிய மக்கள் வீட்டு மனை கேட்டு பலகட்டப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட் கட்சி தலைமையில் இங்குள்ள வறிய மக்கள் 2018ல் போராட்டத்தை துவக்கினர். பலமுறை மனுக்கள் கொடுத்தும் நிலம் இல்லை என்று அதிகாரிகள் இழுத்தடித்தனர். வனத் துறை அதிகாரி ஒருவர் ஆக்கிரமிப்பில் இருந்த ஏழு ஏக்கர் நிலத்தை கட்சி கண்டுபிடித்து, அந்த இடத்தில் வீட்டுமனை வழங்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. ஊராட்சி இடத்தில் வீட்டுமனை கொடுக்க ஊராட்சித் தீர்மானம் வேண்டுமென்றனர் அதிகாரிகள். கட்சியின் அழுத்தம் காரணமாக ஊராட்சித் தீர்மானமும் பெறப்பட்டது. வீட்டுமனை இல்லாதவர்களின் பட்டியலை அதிகாரிகள் எடுத்தனர். 88 குடும்பங்கள் கண்டறியப்பட்டது. இதில் அதிகப்படியாக தலித்துகளும் வன்னியர்கள் உள்ளிட்ட தலித் அல்லாதவர்களும் உள்ளனர்.

மீண்டும் பல காரணங்களைச் சொல்லி தாமதப்படுத்தியதால் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி தலைமையில் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே முழக்கம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பின்னணியில் வீட்டு மனை கேட்டு ஆட்சியர் அலுவலகம் நோக்கிய நடைபயணப் போராட்டத்திற்குத் திட்டமிடப்பட்டது. 12.02.2025 அன்று, கூட்டடியில் 200 க்கும் மேல் மக்கள் திரண்டிருந்தனர். காவல்துறை போராட்டத்தை முடக்கும் நோக்கத்தில் மக்களை கைது செய்யத் தொடங்கியது. பெண்கள் கைதாகமாட்டார்கள் என நினைத்திருந்த காவல்துறை முகத்தில் கரியைப் பூசுவதைப்போல் ஏராளமான பெண்கள் தாமாகவே போலீஸ் வேனில் ஏறினர். சுமார் 40 பெண்கள் ஆக்ரோஷத்துடன் காவல்துறை வண்டியில் ஏறியதைக் கண்டு உற்சாகம் பெற்ற ஆண்களும் கைதாகி சிறை செல்லத் தயாரானாகள். எண்பதுக்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து வைத்திருந்து மாலையே அனைவரையும் விடுதலை செய்தது.

இந்த போராட்டம், இகக(மாலெ) மாநிலக் குழு உறுப்பினர் ராஜசங்கர், மாவட்டக் குழு தோழர்கள் ஆறுமுகம், வல்லமநாதன், ஏழுமலை உள்ளிட்ட தோழர்களின் வழிகாட்டுதலில் நடைபெற்றது.

சி. ராஜசங்கர்




# அகில உலக பெண்கள் நாளை

# பெண்கள் உரிமைகளுக்கான போராட்ட நாளாக மாற்றுவோம்!

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 அகில உலக பெண்கள் நாளாக அனுசரிக்கப்படுகிறது. அதிக வேலைநேரம், குறைவான கூலி, வாக்குரிமை இல்லாத நிலை போன்றவற்றுக்கு எதிராக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கிளர்ந்தெழுந்த பெண்கள், பெண்கள் அமைப்புகளை உருவாக்கி, போராட்டங்களை கட்டமைத்தனர். அதன் தொடர்ச்சியாகவே மார்ச் 8 பெண்கள் நாளாக அனுசரிக்கப்படுகிறது. அண்மைய காலங்களில் பெண்களுக்கு வாழ்த்துகள் கூறும் சடங்காக இந்த நாள் மாறிப் போனது.

இன்றைக்கு இந்தியாவை ஆட்சி செய்யும் பாசிச மோடி அரசாங்கம் பெண்கள் மீது எண்ணற்ற அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுகிறது. அதிக வேலை நேரம், குறைவான, சமமற்ற ஊதியம், பாதுகாப்பற்ற வேலை நிலைமைகள், பணியிடங்களில் பாலியல் தொல்லைகள் உள்ளிட்ட எண்ணற்ற பிரச்சினைகளை உழைக்கும் பெண்கள் எதிர்கொள்கின்றனர். அதேவேளையில் பெண்கள் என்ற காரணத்தினாலேயே பொது வெளியிலும் குடும்பத்திற்குள்ளும் பெண்கள் மீது வன்முறை நிகழ்த்தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சங்கிப் படையணியின் 'கலாச்சாரக் காவலர்கள்' இந்தியப் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு என்பவற்றின் பெயரால் பெண்கள் மீது நிகழ்த்தும் வன்முறைகள் முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு அதிகரித்துள்ளது.

பிப்ரவரி 26 மஹா சிவராத்திரி அன்று அசைவ உணவுகளைப் பரிமாறியதாகக் கூறி தில்லியிலுள்ள சவுத் ஏசியன் பல்கலைக் கழகத்தில் மாணவிகள் தாக்கப்பட்டுள்ளனர். ஏபிவிபி-யின் குண்டர்கள் இந்த வன்முறை செயலை அச்சமின்றி அரங்கேற்றியுள்ளனர். இதுபோன்ற நிகழ்வுகளில் அரசு நிர்வாகம் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு மாறாக பாதிக்கப்பட்டவர்களைத் தான் தண்டிக்கிறது. அரசமைப்புச் சட்டத்திற்கு மாறாக மனுஸ்மிரிதியை சட்டமாகக் கொண்டு வர நினைப்பவர்கள் ஆட்சியில் இருக்கும் போது பெண்களுக்கு எங்குமே பாதுகாப்பு கிடையாது தான்.

இந்தப் பின்னணியில் பெண்கள் தங்களை அமைப்பக்கிக் கொண்டு தங்கள் உரிமைகளுக்காக போராட்டக் களங்களில் அணிதிரள வேண்டிய அவசியம் உள்ளது. அகில உலக பெண்கள் நாளை பெண்கள் உரிமைகளுக்கான போராட்ட நாளாக மாற்றுவதன் மூலம் பெண்களின் உரிமைகளை வென்றெடுக்க உறுதியேற்க வேண்டும். பெண்களுக்கு எதிரான பாசிச ஆட்சிக்கு எதிராக போர் முழக்கம் எழுப்ப வேண்டும்.

**எம். எல். செய்தி கடிதத்திலிருந்து.**

# பெண் விடுதலை இல்லாமல் புரட்சி இல்லை; புரட்சி இல்லாமல் பெண் விடுதலை இல்லை.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் இருந்தும் கந்தர்வக் கோட்டையில் சந்தித்த அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாவட்டத் தலைவர்கள் “பெண் விடுதலை இல்லாமல் புரட்சி இல்லை; புரட்சி இல்லாமல் பெண் விடுதலை இல்லை” என்று உரத்து முழங்கினர். பிப்ரவரி 8, 9 நாட்களில் நடந்த நிகழ்வில், பெண்கள் கழக கொள்கை அறிக்கையை மிகுந்த ஈடுபாட்டுடன் விவாதித்தனர். பெண்கள் கழகம் துவக்கப்பட்ட பிப்ரவரி 12 அன்று கொடியேற்ற நிகழ்ச்சிகள் நடத்தி மாவட்ட அளவில் கொள்கை அறிக்கையை விவாதிப்பது என்றும் முடிவு செய்தனர்.

ஒன்றிய மோடி ஆட்சியின் பெண்கள் விரோத நிதிநிலை அறிக்கையை கண்டித்து பேசினர். 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பணியாற்றிவரும் அங்கன்வாடி ஆஷா ஊழியர்கள் கோரிக்கையை தொடர்ந்து நிதியமைச்சர் நிர்மலாவும் மோடியும் புறக்கணித்து வருவதை கண்டனம் செய்தனர். திறந்தவெளி கழிப்பிடத்தை 2019 க்குள் ஒழித்துக் கட்டப்போவதாக சொன்னார் மோடி, இதை வெற்று வாய்ச்சவடாலாக்கிவிட்டார் என்று சாடினர். இந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் வெறும் 12,000 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளதை கண்டித்து கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

உலகளவில், திறந்த வெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவதில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவில் நிதி அமைச்சரின் நிதி ஒதுக்கீடு இந்த திட்டத்துக்கு மூடுவிழா நடத்தும் முயற்சி என குற்றம்சாட்டியது. திறந்த வெளி கழிப்பிடத்தை ஒழிக்கப்போகிறேன் என்று தம்பட்டம் அடித்த மோடி, திரிவேணிசங்கமத்தையே திறந்தவெளிக் கழிப்பிடமாக மாற்றி விட்டது எனச் சாடியது.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை அன்றாட செய்தியாகிவிட்டது. அதிலும் கல்வி நிறுவனங்களில் நடந்துவரும் வன்கொடுமை செய்திகள் அபாயகரமாக அதிகரித்து வருகின்றன. ஆனால், ஒவ்வொரு செய்திகளுக்குப் பிறகும் தமிழ்நாடு, சென்னை பெண்களுக்கு பாதுகாப்பானது என்று முதலமைச்சர் உட்பட ஆட்சியாளர்கள் சொல்லி வருகின்றனர். இத்தகைய வன்கொடுமைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதற்கு மாறாக தமிழ்நாடு “பாதுகாப்பானது” என திரும்பத் திரும்ப கூறுவது குற்றங்கள் ஒன்றுமில்லை என்பதற்கு ஒப்பானது. இதுதான் ‘பொள்ளாச்சிகளுக்கு’ ஊக்கம் உள்ளது. பாதுகாப்பான தமிழ்நாட்டில் எதற்கு மரண தண்டனை சட்டம்? என்ற கேள்வியும் எழுகிறது. ‘அதிக தண்டனை என்பதைவிட உறுதியான தண்டனை’யே முக்கியமானது எனும் அஇமுபெக வலியுறுத்தியது.

**மார்ச் 8: மனு ஸ்மிருதி எதிர்ப்பு; பெண்விடுதலை நாள்**

கூட்டம், பிப்ரவரி 12 முதல் மே வரையிலான வேலைத்திட்டம் விவாதித்து முடிவு செய்தது. மார்ச் 8 மாநில அளவிலான பெருந்திரள் பேரணி நடத்துவது; மார்ச் 12-17 வரை குடியிருப்பு பகுதிகளில் பரப்புரை நடத்துவது; தொடர்ந்து மார்ச் 20-25 வரை பெருந்திரள் கிளர்ச்சிகள் நடத்துவதென்று கூட்டம் முடிவுசெய்தது. மார்ச் 30 தொடங்கி ஏப்ரல் 30 வரை உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் நடத்துவது, குறைந்தபட்சம் 10 மாவட்டங்களில் மாவட்ட மாநாடுகள் நடத்தி, மே மாதம் 2வது மாநில மாநாடு நடத்துவதென்றும் முடிவானது.’பெண்கள் கழகம் ஒரு அறிமுகம்’ வெளியீடு ஒன்று கொண்டுவருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

**மோடி அரசின் நிதிநிலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்**

பிப்ரவரி 8 மாலை கந்தர்வக் கோட்டை பேருந்து நிலையம் அருகில், பெண்கள் கழகம், இகக(மாலெ) இணைந்து வறியவர் விரோத, கார்ப்பரேட் ஆதரவு ஒன்றிய நிதிநிலை அறிக்கையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பெண்கள் கழகத்தின் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் மணிமேகலை தலைமை தாங்கினார். மாநில அமைப்பாளர் ரேவதி, ராஜலட்சுமி, இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் அ. சந்திரமோகன், மாவட்டச் செயலாளர் வீ மூ வளத்தான், மாவட்ட நிலைக்குழு உறுப்பினர் சின்னதுரை, மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். மூத்த தோழர் சந்தனமேரி பெண்விடுதலை பாடல் பாடி ஊக்கமூட்டினார்.

மலம் கலந்த தண்ணீரை குடிக்க வைத்து தண்டிக்கப்பட்ட வேங்கை வயல் தலித்துகளையே இரண்டாண்டுகளுக்குப் பிறகு குற்றவாளிகளாக்கியுள்ள காவல்துறையை கண்டித்தும் அமைதியாக இருக்கும் தமிழ்நாடு அரசை விமர்சித்தும் பதவியிலிருக்கும் நீதிபதியைக் கொண்டு மறுவிசாரணை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தியும்; திருமயம் குவாரிக் கொள்ளையை எதிர்த்த அதிமுக செயல்வீரர் ஜகபர் அலியைக் கொன்ற மாபியா - அரசியல்வாதிகள்- காவல்துறையை விரைந்து கடுமையாக தண்டிக்க வேண்டுமென்றும் முழக்கங்கள் காவல்துறையை அதிர்ச்சி அடைய வைத்தன.

இரண்டு நாள் கூட்டம் முடிந்து மோடி பாசிச ஆட்சியை விரட்டுவோம்; பெண்கள் அரசியல் சக்தியாக எழுவோம்! மார்ச் 8, பேரணியில் சந்திப்போம் எனும் உறுதிப்பாட்டுடன், உற்சாகம் ததும்ப தோழர்கள் ஒருவருக்கு ஒருவர் கைகுலுக்கி விடைபெற்றனர்.

- அஇமுபெக அறிக்கையிலிருந்து






## அமு.பெ.க. நிகழ்வுகள்



## பீகார் பொதுக் கூட்டம்










MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 07.03.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023




# போர்க்குணமிக்க, தீவிரமான தொழிலாளர் இயக்கத்தைக் கட்டமைப்போம்!

## ஏஐசிசிடியு: 11வது அகில இந்திய மாநாடு மாபெரும் வெற்றி!






Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh